திராவிடநாடு



கேட்டீரா சேதி!

"2வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை ராஜ்யத்தில் புதிய தொழில்களை ஆரம்பிக்கத் திட்டமொன்றுமில்லை; சென்னையில் முதலீட்டைக் கவனித்தால் ரூ. 19 ஆகும். ஆனால் கல்கத்தாவிலும் பம்பாயிலும் ரூ. 130 ஆகும் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் தென்னிந்தியா தொழில் துறையில் புறக்கணிப்பட்டிருப்பது நன்கு தெரியவரும் சென்னையின் கோரிக்கைக்குப் போதிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும், பெரம்பூர் 'கோச்சு' உற்பத்தித் திட்டமும் புதியதைத் தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாகாது. ஏனென்றால் இவை சென்ற ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன." என்று ஜுலை 20ல் மதுரையில் நடைபெற்ற மதுரை, இராமநாதபுரம் வர்த்தக சபையின் காலாண்டுக் கூட்டத்தில் அதன் தலைவர் T. S. ராஜம் கூறினார்.

(தினமணி—21-7-56)

*

அவர் நீதிக்கு அமைச்சர்! என்றாலும் இலஞ்சம் வாங்கினார்!! அதனால், பதவியிலிருந்து விலக்கப்பட்டு, குற்றவாளிக் கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். வெளி நாடு செல்ல விரும்பிய ஒருவருக்கு அனுமதி தருவதற்காகவே, அவர் இலஞ்சம்வாங்கியது. அமைச்சர் அதிலும் நீதியமைச்சரே நெறி தவறினார் என்றால் எப்படியிருக்கும்? குற்றமும் ருசுப்பிக்கப்பட்டது. அதனால், அந்த மந்திரியாரைக் கோர்ட்டார் 12 மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்கும்படி உத்தரவிட்டார்கள்! இப்போது குடியரசுத் தலைவர் சுகர்னோ, அந்தத் தண்டனையை ஆறுமாதமாகக் குறைத்திருக்கிறாராம், இந்தோனேஷியாவில். நெறிதவறிய அமைச்சரின் பெயர் டாக்டர் ட்ஜோடி என்பதாகும்! இதுபோல, இங்கும், போலீஸ் புலிகள் முயன்றால்....?

*

கிழக்குப் பாகிஸ்தானில் ஒரு யூனியன் போர்டு தலைவர், தன்னுடைய உறவினர்களாகப் பார்த்து 'ரேஷன் கடைகள்' திறக்க அனுமதியளித்தாராம். அதற்காக அவர், ஜுலை 20ந் தேதி, கோர்ட்டு உத்திரவுப்படி, வீதியில்நிறுத்தப்பட்டு சாட்டையால் அடிக்கப்பட்டிருக்கிறார். சவுக்கடித் தண்டனை தரப்படுவது, பாகிஸ்தானில், இதுதான் முதல் தடவையாகும். இந்தத் தலைவர், ரேஷன் கார்டு வாங்க வந்த ஒவ்வொருவரிடமும் இலஞ்சம் வாங்கினாராம்.

*

இலங்கையில், பிச்சைக்காரர்களை ஒழிப்பது சம்பந்தமாக ஜுலை 21-ல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது பிச்சைக்காரர்களிலேயே முதலாளிகள் இருப்பதும் தெரிய வந்ததாம்! இந்த 'முதலாளிகள்' ஊருக்கு ஊர் எங்கெங்கு தேர் திருவிழாக்கள் நடைபெறுகிறதோ, அங்கு பிச்சைக்காரர்களைக் கூட்டம் கூட்டமாக அழைத்துச் சென்று சம்பாதிப்பது வழக்கமாம!

*

மெல்லிய துணிகளை உடுத்திக்கொள்வது நாகரீக நாரீமணிகளின் 'மோஸ்தராகி' வருவதும், இதனால் நமது பட்டைவிட, நைலான் போன்ற வெளிசரக்குகளை வாங்குவதும் பெருகி வருகிறதல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு அறிவுரைவழங்குகிறது, இங்கிலாந்திலுள்ள அரசியின் மாளிகை. அண்மையில் எலிசபெத்ராணியார் விருந்தொன்று ஏற்பாடு செய்திருந்தாராம்! அதற்கு ஏராளமான மாதர்கள் வந்திருக்கிறார்கள்; பெரும்பாலோர் மிகவும் துல்லியமான 'நைலான்' ஆடைகளையே அணிந்து வந்திருந்தனர். விருந்து நடந்து கொண்டிருந்த போது, திடீரென்று 'சோ'வென மழை பெய்ய ஆரம்பித்து விட்டது! எப்படியிருந்திருக்கும்? "சேச்சே' எங்களுக்கு ஒரே அதிர்ச்சியாகப் போய்விட்டது", என்கிறார் ஒரு அதிகாரி. ஆடைகள் நனைந்து, அங்கமெல்லாம் தெரியவே, மங்கையர்கள் இங்குமங்கும் ஓடி ஒளிய வேண்டி நேர்ந்ததாம்! இனிமேலாவது இந்த 'இக்கட்டு' இருசாராருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, 'இனிமேல்,' விருந்துக்கு வரும் யாரும் நைலான் உடைகளை அணியக்கூடாது', என்று அரசியார் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளார் இந்த வாரம்.

*

"ஏன் தமிழ் மக்கள் இந்தியை எதிர்க்கின்றன('ர்' இல்லை மித்திரனில்!) என்று புரியவில்லை. சுதந்திரம் அடைவதற்கு முந்தியே மகாத்துமா காந்திஜி ஒரு பொது மொழி அவசியம் என்று சொன்னார். இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் இந்தியே பேசுவதால் அதுவே பொது மொழியாக இலாயக்கானது" என்று முதலமைச்சர் காமராஜர் எட்டயபுரத்தில் பேசினாராம் 22ந் தேதி.

*

இந்தி இப்போது அரசியல் மொழியாகக்கூடாது, அதற்கான வகையில் அரசியலமைப்பைத் திருத்தவேண்டும் என்று தென்னாட்டினர் கூறிய யோசனைகளை, டில்லியின் ஆலோசனைக் கமிட்டி ஏற்றுக்கொள்ளவில்லை, என்று ஒரு சேதி கூறுகிறது! 'காமராஜர்கள் இருக்கும்போது' வேறென்ன கிடைக்கும்!

*

உலகத்தில் ஓராண்டில் எவ்வளவு புத்தகங்கள் உற்பத்தியாகிறது என்று, அமெரிக்காவில் புள்ளி விபரம் எடுத்துள்ளார்கள். அதன்படி 500—கோடி புத்தகப் பிரதிகள் தயாராகிறதெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

★

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 15 :: இதழ் 4

29-7-56

படைகள் பாய்கின்றன!

இத்தகைய ஏற்றம், இதுவரை எவரும் பெற்ற தில்லை! எமது நேருவுக்கு இணை எவரே!!—என்று, இங்குள்ளோர், நமது மூக்கினையுடைக்கும் நல்லதொரு வாய்ப்பெனக் கருதி முழக்கக்கூடும், நேருவின் வெளிநாட்டு விஜயம் குறித்து.

நேருவுக்கு ஆங்காங்கே கிடைத்திருக்கும் வரவேற்பும் வாழ்த்தும் சாதாரணமானதல்ல! சென்ற பல இடங்களில் அவரை, சமாதான தூதர், பஞ்சசீலர், பாரதப் புதல்வர், ஏழைகள் துயர் துடைக்கப் பாடுபடும் இலட்சிய வீரர், அடிமை நாடுகளை ஆதிக்கக்காரர்களிடமிருந்து மீட்கப் போராடும் அண்ணல், என்றெல்லாம் வாழ்த்தியிருக்கிறார்கள். அவரும் சென்ற இடமெல்லாம், இத்தகைய சீரிய குணங்கள் தம்மிடமிருப்பதாகவே, பாவனையாலும் பேச்சாலும் காட்டியிருக்கின்றார்.

"ஆட்சிக்குச் சின்னமே, அசோகச் சக்கரம்! அசோகன் யார் தெரியுமா? கலிங்கப் போரிலே, கால் வேறு தலைவேறாகவும், கண்ணிழந்தும் கரமிழந்தும், உலவிய ஆயிரமாயிரம் வீரர்களையும்; அங்கே ஓடிய குருதி வெள்ளத்தையும் கண்டு, மனம் நொந்து இனிப் போருக்கே போகமாட்டேன் எனச் சபதம் பூண்டு புத்தமார்க்கம் கொண்ட புனிதன். அவனுடைய ஆட்சிச் சின்னத்தையே, நேருவும் ஏற்றுக்கொண்டார் எனில், இவரைவிட யாரே போர் கூடாதெனக்கூற அருகதையுடையார்?", என்று ஆங்காங்கும் பலர், கருதியிருக்கக்கூடும். வேறுபலர் "அண்மையில்தான் புத்தர் பிறந்த 2500 வது ஆண்டு நாளை விமரிசையாகக் கொண்டாடியது இவரது சர்க்கார், புத்தர் யார்? புனிதன்! ஜீவராசிகளிடத்தில் அன்பு கொள், அரவணை, ஆதரவளி, ஆசையை அகற்று என்று கூறிய ஞான போதகன்! அவன் நல்லுரையினை ஏற்றுக்கொண்டிருப்பதைக் காட்டத்தானே, நேருவின் அரசாங்கம் அவ்வளவு விமரிசையாக அந்த நாளைக் கொண்டாடிற்று", என்று அசதியாடி, அவர்புகழ் பாடியிருக்கக்கூடும். அதனை தக்க முறையில், கிருஷ்ணமேனனும் — அவர்கள் மறந்திருந்தாலும்—எடுத்தோதத் தவறியிருக்கமாட்டார்!

இவ்வளவு கோலாகலமும், உலகச் சிறப்பும், பெற்றுக்கொண்டு டில்லிமா நகரத்தில் இறங்குகிறார் நேரு பண்டிதர்! அதே சமயத்தில், அவருடைய படைகள், அதோ அணிவகுத்துக்கொண்டு செல்லுகின்றன, அஸ்ஸாம் எல்லை நோக்கி!

நாகர்களின் அட்டகாசம் அதிகரித்து விட்டதாம்.

அதனால், இதுவரை போராடும் இராணுவப் படை போதாதென்று அதிகப் படைகள், அனுப்பப்பட்டுள்ளன ஜூலை 20-ந்தேதி.

அன்பு மார்க்கம் போதிக்கிறார், நேரு உலகுக்கு! இதோ, அவர்தம் படைகள் அணிவகுத்துச் செல்லுகின்றன, நாகநாட்டுக்குள்!!

அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் அளிக்கத்தான் வேண்டும் என்று சொன்ன நேருவும் தெரிகிறார்— அதிகப் படைகளை அனுப்பிவைத்தாவது நாகர் தம் சுதந்திர வேட்கையை அடக்கிட முயலும் பாரதத் தலைவரும் தெரிகிறார்.

500 பேருக்குமேல் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் நாகர்கள்!—என்றோர் சேதி, முன்பு வந்தது.

அதையொட்டி, நாகர்களின் கலவரம் சமாளிக்கப்பட்டுவிட்டது, விரைவில் அமைதி நிலவும்-என்று சர்க்கார் சார்பில், அறிவிக்கப்பட்டது.

அவர்களுக்குப் புத்திவந்துவிட்டது — இந்திய சர்க்காரை எதிர்ப்பது நல்லதல்ல என்று புரிந்து கொண்டார்கள், அதனால் பல நாகர் தலைவர்கள் சரணாகதி அடைந்துவிட்டார்கள் — இப்படியும், செய்தி கூறப்பட்டது.

ஆனால், 20-ந்தேதி அதிகப்படைகள், பெருத்த அளவில் நாகர் தம் நாட்டுக்குள் நுழைந்திருக்கின்றன!!

"என்ன செய்வது? நாகர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு அளவுண்டோ! சர்க்காரை எதிர்த்துச் சண்டையல்லவோ போடுகிறார்கள். அவர்களை அடக்கவேண்டாமோ? 'சட்டமும் அமைதியும் காக்கப்படவேண்டாமோ!" என்று கேட்கக்கூடும், காங்கிரஸ் கனம்கள்.

அவர்கள் கவனத்துக்கொரு செய்தி. நாகர்கள், ஏன் இவ்வளவு தூரம் வெகுண்டெழுந்தனர், தெரியுமா? இதோ, தேசிய ஏடு ஒன்று ஜூலை 1-ந்தேதி வெளியிடுகிறது.

பிருபார் ரயில்வே ஸ்டேஷனைத் தாக்க இன்று நாகர்கள் முயற்சித்தார்கள். கூட்டமாக அவர்கள் வந்தபோது 'பசியால் சாகிறோம்! பசியால் சாகிறோம்!!" என்று கூவிக்கொண்டே வந்தார்கள்.

இப்படி ஒவ்வொரு இடத்தையும் தாக்க முற்படும்போது அவர்கள், 'பசியால் சாகிறோம்!' என்று முழக்கமிட்டுக்கொண்டே தாக்குகிறார்களாம்!

"நாம், பசியால் சாகிறோம். ஏன்? நமக்குத் தனி நாடு, இல்லை; அதனால், தனி நாட்டை பெற்றுவிட்டால், ஏ, நாகர்களே! நாம், பசியாற உண்ணலாம். வாழலாம். ஆகவே, வாரீர்! வாரீர்!!" என்பதுதானே அந்த முழக்கத்தின் பொருள்.

பசியால் சாகிறோம்! எமக்குத் தனி நாடு வேண்டும்! — என்று முழக்க மிட்டுக்கொண்டு, நாகர்கள், கிளர்ச்சி செய்கிறார்கள். அந்தக் கிளர்ச்சியினை, போலீஸ்காரர்களைக் கொண்டு சமாளித்து வருவதாகச் சொல்லிற்று, டில்லி—பின்னும் சில நாட்களுக்கெல்லாம் இராணுவமே ஈடுபட்டிருப்பதாகத் தகவல் வந்தது—இராணுவ நடவடிக்கை பூரண திருப்தி அளித்து வருவதாகவும், 500 பேருக்கு மேல் நாகர்கள் சாக நேர்ந்ததாகவும் கூறப்பட்டது—தலைவர்கள் சரணாகதி, எல்லாம் சரியாகிவிட்டது என்று பேசப்பட்டது — இன்றோ, அதிகப் படைகள், பெருத்த அளவில் அங்கே நுழைந்துள்ளன!

படைகள் நுழையும் இச்சமயத்திலே நாகர்கள் எத்தகைய வேக உணர்ச்சி பெற்றுள்ளனர் என்பதை விளக்கும் நிகழ்ச்சிக் குறிப்புகளும் கிடைக்கின்றன-வயோதிகர்கள், வாலிபர்கள் மட்டுமல்ல, பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள்கூடப் போர்க்கோலம் பூண்டிருக்கின்றனராம். அஸ்ஸாம் தலைநகரமான ஷில்லாங்கில் படிக்கும் மூன்று மாணவர்கள்—பதின் மூன்று வயதுடையவர்கள்-பாலம் ஒன்றைத் தகர்த்தெறிய முயன்றனராம்! 13-வயதுச் சிறுவர்கள் — அவர்கட்கே, இவ்வளவு ஊக்கமும் உணர்ச்சியும் எழும்பியுள்ளதென்றால் நாகநாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியின் வேகத்தினை எடைபோடவும் இயலாதே.

"இதுதான், சரியா! இப்படி, பாலங்களைத் தகர்ப்பதும், பலாத்காரத்தை மேற்கொள்வதும்தான் வழியா? கண்ட கண்ட இடத்தில் சுட்டு மன்றோ போடுகிறார்களாம்! தலையைக் கூடவன்றோ வெட்டி வீசுகிறார்களாம்! தகுமா, இது?" என வாதிக்கக்கூடும், நண்பர்கள். உண்மைதான், அறிவோதயம் மலர்ந்திருக்கும் இந்த நாட்களில், இப்படி நெறிகெட்ட முறைகளில் அவர்கள் ஈடுபடக் கூடாதுதான்!

ஆனால் அவர்களுடைய நாகரீக வளர்ச்சியினையும், நாகர்கள் இத்துணை ஆண்டுகளாகப் பெற்றிருக்கும் பயிற்சியினையும் பற்றி எண்ணுவோருக்கு, இது, விந்தையாகத் தெரியாது.

வெள்ளையன், இந்திய உபகண்டத்தை ஆண்ட காலத்தில், படிப்பையும் உலக அறிவுகளையும் ஊட்டினான் நமக்கு! அதனால் அவனது ஆட்சிக் காலத்தில், மத்யதரவர்க்கம் என்றழைக்கப்படும் கணக்கர்களும், அதிகாரிகளும், குமஸ்தாக்களும் அதிகமானார்கள். பொதுவாக, கல்வி அறிவு பரவியது. அப்படிப்பட்டவர்களே, வெள்ளையனை எதிர்க்கக் கிளம்பிய போது, தமது மனைவி மக்களைச் துச்சமெனக் கருதி, அச்சமில்லை அச்சமில்லை என்று பாடி, தந்தியை அறுத்து, தண்டவாளத்தைப் பெயர்த்து வெள்ளையரைக் கண்டால் தாக்கி, சுதந்திரத்துக்காக உயிரையே இழக்கத் துணிந்தனரென்றால்! அன்று முதல் இன்றுவரை காடே வீடாய், காட்டுமிராண்டித்தனமே நாகரீகமாய் சொண்டு விளங்கும் நாகர்களுக்கு, உயிர் ஒரு பிரச்னையாகவா, தோன்றும்? அக்கிரமத்துக்கு அடிபணிந்து கிடக்கிறோம் — இந்த அநீதியை அழிக்க வேண்டும் என்கிற உத்வேகம் கிளம்பியதும், கையில் கிடைத்ததைக் கொண்டு, பார்ப்போம் ஒருகை என வருகிறார்கள். அதிலும், கடந்த உலகப் போரில் ஜப்பானியர் போட்டுவிட்டோடிய துப்பாக்கியும், குண்டும், கையிலிருக்கிறது-போராட வருகிறார்கள்.

'அது சரியய்யா! நாம், அந்நியனை எதிர்த்து விரட்டப் பல வழிகளில் போராடினோம். அதே வழிகளிலா, இவர்களும் இறங்குவது? நாம் எல்லாம் இந்தியரன்றோ!" எனக் கேட்கலாம், காங்கிரஸ் நண்பர்கள்.

அந்த இடத்தில்தான் நாகர்கள் வேறுபடுகிறார்கள், "ஐயா! நாங்கள் ஒன்றும் இந்தியர் அல்லர். வெள்ளைக்காரன் காலத்திலும், எங்களுக்கு ஒன்றும் நன்மைகள் கிடைத்துவிடவில்லை. உங்கள் காலத்திலும் பசியால் சாகிறோம். நாங்கள், நாகர்கள். எமக்குத் தனிநாடு வேண்டும். பிரித்துக் கொடுத்தால் உங்களுக்கென்ன நஷ்டம்?" என்று கேட்கிறார்கள்.

பிரிந்து போங்கள், என்று சொன்னால், என்ன நஷ்டம் நேருவுக்கு! ஆள்வதற்கு அவருக்கிருக்கிற இடம் போதாதா? அல்லது புகழ்தான் போதாதா? சின்னஞ் சிறு கூட்டம் நாகர்கள்! அவர்கள் பிரிந்துபோய் வாழ முடியும் என்றால் வாழ்ந்துதான் பார்க்கட்டுமே!

நேருவுக்கு, இயலவில்லை, ஆதிக்க ஆசையை அகற்ற. அதனால் ஆரம்பத்தில் அலட்சியம் காட்டினார்.

இதென்ன பெரிய பிரச்னையா — என்று ஏளனம் செய்யப்பட்டது.

தாங்கள் கவலைப்படுவதற்கு, அமெரிக்கா இருக்கிறது, ருஷ்யா உள்ளது, பிரிட்டனிருக்கிறது, பிரான்சு உளது, இதென்ன சுண்டைக்காய்! என்றே, டில்லி கருதியது. அவர்களை அழைத்துப் பேசவும், ஆரம்பத்தில் மறுத்தது.

அப்படிப் பேசி, ஒன்றுபட்டிருந்தால் உங்களுக்குத்தானய்யா இலாபம் என்று புள்ளி விபரங்களைக் காட்டி "நான் யார் தெரியுமா? சர்வோதயம் போதித்த காந்தியடிகளின் பிரதம சீடன்! எனது நோக்கம், காட்டு மிராண்டிகளாகத் திரியும் உங்களையெல்லாம் ஈடேற்றுவதுதான். அன்பால், உங்களை ஆதரிக்க வேண்டுமெனும் நற்பண்பால், பிரிந்துபோக வேண்டாமெனக் கூறுகிறேனேயொழிய வேறல்ல", என்று விளக்கியிருக்கலாம்.

ஒருவேளை, நாகர்கள்கூடத்திருப்தியடைந்திருக்கக் கூடும்.

மாறாக டில்லி, சர்ச்சிலின் பாதையைப் பின்பற்றியது! நேரு, முறைத்துப் பார்க்கலானார்!! வெள்ளையன், வீசிய முறைகளை, பரீட்சை பார்க்கலானார்.

மிரட்டினார்.

விபீடணர்களைத் தயாரிக்க முயன்றார்.

கலகக்காரர்களைப் பிடித்துக் கொடுப்போருக்கு சன்மானம் தருவேன் என்றார்.

சம அந்தஸ்துக் கொடுத்து விவாதிக்க மறுத்தார்!.

நாகர்களின் கிளர்ச்சியை வெகு சாதாரணமாக மதித்தார்!!!

விளைவு பெரிதாகிவிட்டது-நாகர்களை அடக்க இராணுவம் செல்லுகிறது, அதுவும் பெருத்த அளவில் செல்லுகிறது!!

முடிவு என்னாகும் என்பதைவிட, நேருவின் போக்கையே நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அல்ஜீரியா சிறு நாடு! அதற்குச் சுதந்திரம் கொடுக்குமாறு, பிரான்சை வலியுறுத்த முடிகிறது நேருவால் —அகில உலக வல்லரசுகளையும் பார்த்து 'ஒத்துவாழும்' கொள்கையை எடுத்தோதுகிறார் — அதற்காக ஒவ்வொரு நாட்டிலும் உற்சவ மூர்த்தி போலக் கொண்டாடவும் படுகிறார்—உள் நாட்டிலோ, படைகள் பாய்கின்றன! பிணங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன! பிரிந்து செல்ல விரும்புவோர், மீது குண்டுமாரியும், டாங்கிப் படையும் செலுத்தப்படுகிறது!!

இந்த அக்கிரமத்தை, எடுத்துக் கேட்க, நாதியில்லை நாட்டில். அறிஞர்கள், சரிதாசிரியர்கள், சமாதான பூஜ்யர்கள், விஞ்ஞான வித்தகர்கள், ஏடு நடத்துவோர், கூடிக் குலவும் பெரிய கட்சிகள், இத்தனையும் உள்ளன. எனினும், எவரும் வாயைத் திறக்கவில்லை! நேருவின் ஜோதி, கண்களை மட்டுமல்ல கருத்தையும் குருடாக்குகிறது போலும்!!

✶

உண்மையான மதவாதி

[உடுமலையான்]

தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஜோகன்ஸ்பர்க் நகரத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சேரிகளிலும், தீண்டப்படாதவர்கள் என்று வாசல் அளவிலும் நம் நாட்டில் நிறுத்தி வைப்பதைவிட கடுமையாக ஒதுக்கல்முறை தலைவிரித்தாடுகிறது. வெள்ளையர்களுக்குத் தனி 'டாக்ஸி' கார்கள், கருப்பர்களுக்குத் தனி 'டாக்ஸி' கார்கள், பஸ் "ஸ்டாப்" களில் கருப்பர்கள் மழையிலும் வெய்யிலிலும் நனைந்து கொண்டேதான் நிற்க வேண்டுமாம்., 'பிராம்மணரல்லாதவர்கள்" என்ற பெரும்பான்மையானவர்கள் இங்கே நடத்தப்படுவதைப்போல.

மேல்படிப்புக்கு சுதேசிகளுக்கு ஏராளமான தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. "பல்கலைக் கழகப் படிப்பே வெள்ளையர்களின் பிறப்புரிமைதான்" என்று கருதப்படுகிறது.

ஒதுக்கல் முறையின் மிகப் பயங்கரமான கட்டம் "பாஸ் போர்ட்" விஷயந்தான். ஆப்பிரிக்கர்கள் எந்த இடத்திற்கு, எப்பொழுது சென்றாலும், நடமாட்டச் சீட்டு வைத்திருக்க வேண்டுமாம். இது இல்லாவிட்டால் ஒருஆப்பிரிக்கன் எங்கும் வேலைசெய்யவோ, தங்கி வாழவோ முடியாதாம். அந்த சீட்டிலேயே அவனுடைய பூர்வீக "ஜாதகம்" எல்லாம் குறிக்கப்பட்டிருக்குமாம்.

நாகரிக உலகத்திற்கும் மனிதப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஒருஅவமானச் சின்னமாக இருந்த இந்த நாட்டிற்கு ஒரு பாதிரி 1943ல் இங்கிலாந்திலிருந்து வந்து சேர்ந்தார். 'வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு" என்று இயேசுவின் மார்க்கத்தைப் பின்பற்றிய ட்ரெவர் ஹட்டில்ஸ்டன் வந்து இறங்கியபோது, கண்ட இடங்களிளெல்லாம் சுதேசிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த முறைகளையும் அவற்றைப் பறைசாற்றிக் கொண்டிருந்த பலகைகளையும் பார்த்து மனம் வெதும்பினார். வெள்ளையர்களுடைய நாகரிகம், கருப்பர்களுடைய உழைப்பு இல்லாமல் போனால் செத்துமடியும் என்பதை உணர்ந்தார். ஜோகன்ஸ்பர்க் நகரத்திற்குப் பக்கத்தில் உள்ள சோபியாவுடன் என்றபட்டணத்திற்குத்தான் பாதிரியாக நியமிக்கப்பட்டுவந்தார். அப்படி வந்தவர், மக்களோடு மக்களாகப் பழகி ஐக்கியமானார். மார்க்க போதகர்களும், பாதிரிகளும் மக்களிடமிருந்து அப்பாற்பட்டவர்கள், மேலானவர்கள் என்ற தவறான கருத்தையும், சமயப் பிரசாரம் மட்டுமே சாமியார்களின் முழு நேர வேலை என்ற எண்ணத்தையும் உடைத்தெறிந்தார்.

மனிதனுக்கு மனிதன் மதிப்புக் கொடுக்காத ஒரு சமுதாயத்தில், வேறு எந்த நல்ல பண்புகளும் வளராது என்ற முடிவுக்கு வந்தார் இந்தப் பாதிரி.

மற்றெல்லா ஒதுக்கல் நடவடிக்கைகளையும் விட, ஆப்பிரிக்கர்கள் எங்கு எப்போது செல்ல வேண்டுமானாலும், "பாஸ்" வைத்திருக்க வேண்டும் என்ற ஏற்பாடுதான் அவருக்கு அதிகக் கோபத்தை ஊட்டியது.

சீட்டில்லாத குற்றவாளிகள்தான் ஜோகன்ஸ்பர்க்கில் அதிகம். இரண்டே நிமிஷங்களில் விசாரணை முடிந்து விடும். இந்தக் குற்றங்களுக்கு எந்தச் சாட்சிகளையும் விசாரிக்க வேண்டிய தேவையில்லை, எந்த வாக்குமூலமும் வேண்டியதில்லை, கோர்ட் என்ற தனி இடமும்கூடத் தேவையில்லை. மண்டபமானாலும் மரத்தடியானாலும் சரி, விசாரணையும் தண்டனையும் சில நிமிஷங்களில் முடிந்துவிடும்,

ஹட்டில்ஸ்டன் இந்த மிருகத்தனமான முறையைப் பார்த்து மனம் கொதித்தார். இதுமாதிரி குற்றம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிய நிதி திரட்டமுற்பட்டார். ஒரு நாள் காலையில் தன் கண்காணிப்பில் இருந்த ஒரு பள்ளி மாணவனைச் சிறையில் தள்ளிவிட்டார்கள் அதிகாரிகள். பாதிரி பையனைக் கேட்டார். "என்னுடைய சீட்டை அவர்கள் கிழித்தெறிந்து விட்டார்கள்" என்று பதில் சொன்னான். ஹட்டில்ஸ்டனுக்குக் கோபம் வந்து போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். குப்பைக் கூடைக்குள்ளே அந்தப் பையனுடைய சீட்டு கிழித்தெறியப்பட்டுக் கிடந்தது.

ஒரு சமயம் சீட்டில்லாத குற்றத்திற்காக அடைபட்டுக் கிடந்த ஒரு சுதேசியை வயிற்றின் மேல் போலீஸ் அடித்ததால் அவன் இறந்துவிட்டான். ஏற்பட்டிருந்த காயங்களுக்கான டாக்டர் சர்டிபிகேட்டுகளோடு பாதிரி மாஜிஸ்ட்ரேட்டை அணுகினார். முடிவு என்ன தெரியுமா? பிரஸ்தாப குற்றவாளி "சில்லிஸ்" வியாதியால் இறந்துவிட்டான் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

"அந்தத் துண்டுக் காகிதம் இல்லாமல் வீதியில் போனால் குற்றம் என்று அபராதமும் தண்டனையும் விதிக்கிறார்களே, அந்தத் தண்டனைக்குத்தகுந்தகுற்றத்தைத்தான் செய்துவிட்டால் என்ன" என்று பலர் குற்றங்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

நடு வீதிகளில் கற்பழித்தல், குத்து, வெட்டு, திருட்டு ஆகிய குற்றங்களை அதிக அளவில் செய்யும் ஒரு இளைஞர் கூட்டமே ஏற்பட்டுவிட்டது. வேறு எந்தவித பொழுதுபோக்கும் இல்லாததால்தான் இப்படிக் கெட்டழிகிறார்கள் என்ற முடிவுக்கு வந்த, ஹட்டில்ஸ்டன் பொழுதுப்பாக்குச் சாதனங்களை உண்டாக்க முயற்சிகள் மேற்கொண்டார். "இளப்புகள் ஆரம்பித்து, பத்திரிகைகள் வரவழைத்து இளங் குற்றவாளிகளிடையே படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார், பன்னிரண்டு பொது நீச்சல் குளங்களும், வெள்ளையர்களுக்குத் தனியாக மூவாயிரம் நீச்சல் குளங்களும் ஜோக்ன்ஸ்பார்க்கில் மட்டும் இருந்தும், ஆப்பிரிக்கர்களுக்கு ஒன்றுகூடக் கிடையாதே என்று மனம் வெதும்பினார். சோபியா டவுனுக்குப் பக்கத்தில் ஆர்லண்டோ என்ற இடத்தில்

ஒரு நீச்சல் குளம் கட்ட நிதி கேட்டார். பணம் சேர மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. நீச்சல் குளம் ஆரம்பித்த உடனே மூவாயிரம் ஆப்பிரிக்கர்கள் சேர்ந்தார்கள், அறுநூறு கருப்பர்கள் குதித்து நீந்தி மகிழ்ந்தார்கள்.

"போஷாக்குக் குறைவு என்று நாகரிகமாகச் சொல்லப்படும் பட்டினிப் பிரச்னை ஹட்டில்ஸ்டனின் கவனத்தைக் கவர்ந்தது, ஆறு பென்ஸ் விலை மதிப்புள்ள சாப்பாடு ஒவ்வொரு வெள்ளைக் குழந்தைக்கும் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் போடப்படுகிறபோது, ஆப்பிரிக்கக் குழந்தைகளுக்கு ஒன்றுமே கொடுப்பதில்லையே, ஏன்?" என்ற கேள்வியை எழுப்பினார். விடாமுயற்சிக்குப் பிறகு இரண்டு பென்ஸ் விலை மதிப்புள்ள சாப்பாடு எல்லா, ஆப்பிரிக்கக் குழந்தைகளுக்கும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தருவதற்கான திட்டம் அமுலோச்சப்பட்டது.

சோபியர் டவுனில் ஒரு சங்கீத சபையை நிறுவி, புகழ்பெற்ற ஆப்பிரிக்க இசைவாணர்களை அழைத்து கச்சேரி செய்து மக்களைக் கவர்ந்தார். வெள்ளைக்கார இசைவாணர்கள் ஜோகன்ஸ்பர்க்குக்கு வந்தால், அவர்களை அழைத்து வந்து ஆப்பிரிக்கர்கள் மத்தியிலே பாடச் செய்து, சமத்துவத்திற்கு இசைக் கலையை நன்கு பயன்படுத்தினார். உலகப் புகழ்பெற்ற எகுடி மெனுஹின் சோபியா டவுனில் வந்து பாடிவிட்டுச் சென்ற பிறகு தன் 'டயரியில்' "இதுவரை தாளிடப்பட்டிருந்த கதவு திறந்தாகிவிட்டது. என்னுடைய ஆப்பிரிக்கர்களுக்கு ஒரு புது சகாப்தம் ஆரம்பமாகிவிட்டது" என்று எழுதிவைத்தாராம் ஹட்டில்ஸ்டன்.

1954-ம் ஆண்டு மலான் சர்க்கார் சோபியாடவுன்மீது ஒரு தாக்குதல் நடத்திற்று. தங்களுக்கெனச் சொந்த வீடு கட்டி வாழுகிற உரிமை தரப்பட்டிருக்கும் ஒரு சில பகுதிகளில் சோபியாடவுனும் ஒன்று. முப்பதினாயிரம் பேருக்கு மட்டும் இருக்கும் இடத்தில் எழுபதினாயிரம் குடும்பங்கள் அடைபட்டுக் கிடந்தன. ஹட்டில்ஸ்டன் அந்த இடத்தை ஒரு மாதிரிப் பட்டணமாக ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தில், வீடுகளை அபிவிருத்திசெய்து நன்றாக வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். குடிசைகளை அகற்றி ஊரைச் சுத்தம் செய்தல் என்ற காரணத்தைக் காட்டி, இவர்களை வீட்டுரிமை இல்லாத பகுதிக்கு மாற்றப் பார்த்தார்கள்.

1955- பிப்ரவரி பத்தாம் நாள் இந்த அக்கிரமம் நடைபெற்றது. வீதிகளில் இரண்டாயிரம் போலீஸ்காரர்கள் லாரிகளில் வந்து உடைமைகளை எடுத்து வீசிக்கொண்டிருந்தார்கள். இத்தனை நாள் கட்டிக் காத்தவீடுகள், தரைமட்டமாவதையும், வைத்திருந்த உடைமைகள் அனைத்தும் நாசமாவதையும் கண்டு மக்கள் கலங்கினார்கள், இந்த மதவாதியும் கலங்கினார். "சாமான்கள் நாசமாவதற்காக நான் கண்ணீர்விடவில்லை. ஆனால் ஜோகன்ஸ்பர்க்கைச் சேர்ந்த கிறிஸ்துவர்களாகிய நாம், வெறுப்புக்கெதிராகக் கொள்கையையும், அதிகார அநீதிக்கு எதிராக மனித உரிமைகளையும் காப்பாற்றத் தவறுகிறோமே என்பதை எண்ணித்தான் கண்ணீர் விடுகிறேன்" என்று எழுதினார்.

கிருஸ்துவப் பாதிரிகள்நடத்தும் பள்ளிகள் மீது சர்க்கா அடுத்தபடியாகத் தன்பார்வையைச்செலுத்திற்று. பண்டு கல்விச் சட்டம் என்று ஒன்றை ஏற்படுத்தி எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. கிருஸ்துவப் பள்ளிகள் ஒரு மாபெரும் தவற்றைச்செய்துவிட்டதாக அதிகார வர்க்கத்தினர் குற்றம் சாட்டினார்கள்.

பூமியின்மேல் உள்ள நாடுகளில் எல்லாம் வசிக்கும் மக்கள் எல்லோருடைய நரம்புகளிலெல்லாம் ஒரேநிறமான இரத்தம் தான் ஓடுகிறது என்ற உணர்ச்சியை ஊட்டியதுதான் அந்தக் குற்றமாம். இந்தக்குற்றம் செய்ததற்காக, ஹட்டில்ஸ்டனின் நிர்வாகத்தில் உள்ள பள்ளியும் மூடப்பட்டது. இந்த குற்றம் செய்வதில் பெருமையும், தண்டனையை ஏற்பதில் மகிழ்ச்சியும் கொள்ள வேண்டியது தான் ஒவ்வொரு மதவாதியின் முதற்கடமையாகும் என்றும் முழக்கினார் அவர்.

தான் பட்ட கஷ்டங்கள் வீண் போகவில்லை என்பதும் தெரிந்தது. ஊர், பேர் தெரியாத எத்தனையோ வெள்ளையர்கள் "இந்த நல்ல பணியைத் தொடர்ந்து செய்யுங்கள்" என்று 'போன்' மூலமும், கடிதவாயிலாகவும் ஆயிரக் கணக்கில் சொல்லுவதுண்டாம்.

மக்களுக்காகப் பரிந்து பேசினாலே, அரசு பீடத்திலுள்ளவர் எரிந்து விழுவதுதான் வழக்கம் என்பதைச் சரித்திரம் சொல்லுகிறது. ஆனால் மக்களுக்காகத் துவக்கப்படும் எந்த நல்ல காரியமும் மெதுவாக, ஆனால் நிச்சயமாகப் பலன் தரும் என்பதையும் சரித்திரம் சொல்லுகிறது. நம் நாட்டில் மஞ்சத்தில் புரண்டு கொண்டும், காமத்தில் ஊறிக் கொண்டும் இருக்கிற மதத்தலைவர்களும், தரகர்களும், இந்த மக்கள் பணியைச் செய்ய முன் வருவார்களா? பந்தல் போட்டு கலியாண விழாவைப் போல ஏற்பாடு செய்து சமத்துவம், சன்மார்க்கம் என்று பேசி, கடைசியில் 'நமச்சிவாய' என்று முடித்துவிட்டு, உண்மையில் மக்கள் மத்தியில் சென்று பேசுகிற நம் போன்றவர்களை கடவுளைக் கண்டிப்பவர்கள் என்று ஏசுகிறார்கள். உண்மையான கடவுளைக்காண முடியாமல் திண்டாடுகிற நம் நாட்டு மதவாதிகளுக்கு பாதிரி ஹட்டில்ஸ்டன் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார். பயங்கர அநாகரிக இருள் சூழ்ந்திருந்த அந்தப் பகுதியில் இந்தப் பாதிரி ஒரு ஒளி விளக்காகத் திகழ்ந்தார். கூவர் மீண்டும் இங்கிலாந்திற்குப் போகும் போது ஜோகன்ஸ்பர்க்கிலிருந்தவர்கள் எல்லோருமே நிறபேதத்தையும் மறந்து கண்ணீர் விட்டார்களாம். "கண்ணெதிரே தெரியும் மனிதனே கடவுள். அவனுக்குப் பணிபுரிவதே நான் செய்யும் பூசை, என் உள்ளமே கோயில்" என்ற முடிவுக்கு வந்த அந்த கிறிஸ்துவப் பாதிரியின் மனப்பக்குவம் இங்கு வருமா? மக்களுக்கு அந்த உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை, பேதமற்ற சமுதாய வாழ்வு மலர வேண்டும் என்று பாடுபடுகிற நமக்கு, நிறைய உண்டு. அந்தப் பணிக்கே நாம் நம்மை அர்ப்பணித்திருக்கிறோம்.

★

காஞ்சீபுரம்

29—7—'56

தம்பி !

உள்ளன்புடன், ஓய்வின்றித்தான் நீயும் எண்ணற்ற இளைஞர்கள் பலரும் பணியாற்றிக்கொண்டு வருகிறீர்கள்—பொதுக் கூட்டங்களிலே உணர்ச்சி வெள்ளம் காண்கிறேன்—மாநாடுகளிலே மட்டற்ற எழுச்சி தெரிகிறது—நமது கழகம் எங்கும் எழிலுடன் வளர்ந்து வருவது விளக்கமாகத் தெரிகிறது—பொலிவும் வலிவும் பூரிக்கத் தக்க விதமாகக் காணப்படுகிறது—அண்ணா! இந்த ஆர்வத்துக்கு ஈடாக எதைக் காட்ட முடியும் என்று என்னைக் கேட்கிறாய், நானும் பெருமிதத்துடன் இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? என்று கேட்டுக் களிப்படைகிறேன்.

தமிழகத்தில், முறையும் நெறியும் அறிந்து, அறநெறியில் அக்கரை காட்டி சிறந்தோர் மக்கள் கட்சியாக வளர்ந்துவிட்டிருக்கிறது தி. மு. க. என்று உண்மையை உணர்ந்து உரைத்திடும் பண்பினர் கூறிடக் கேட்கிறேன்; எனினும், இதோ முதலமைச்சர் "தி. மு. க.வுக்கு எங்கும் பலம் இல்லை!" என்று ஒரே வரியிலே கூறிவிடுகிறார்;

எப்படி இந்த அபூர்வமான ஆராய்ச்சி நடத்தினார், நமக்கோ, நாட்டுக்கோ, புரியாததோர் கண்டுபிடிப்பை அவர் எத்தகைய முறை மூலம் கண்டறிந்தார் என்று என்னைக் கேட்காதே, தம்பி, அவர் முதலமைச்சர், ஆகவே கூறுகிறார்; தேர்தல் சூழ்நிலை உருவாகிறது அதனால் கூறுகிறார் என்று மட்டும்தான் கூறலாம், வேறே அவருடைய அரிய முறை என்ன, தனிப்பட்ட திறமை யாது என்பன பற்றி எனக்கென்ன தெரியும்!

கோயில்பட்டி வட்டாரத்திலே, வழக்கப்படி மின்னல்வேகச்சுற்றுப்பயணம் நடாத்தினார்; இடி முழக்கம் கேட்டனர், இன்மொழி மழை பொழிந்திருக்கும், பிரமுகர்கள் கூடி இருப்பர், பேழையுடையோர் குழைந்திருப்பர்; இவைகட்குப் பிறகு, முதலமைச்சர், 'இரத்தினச் சுருக்கமாக' "தி. மு. க. வுக்கு எங்கும் பலம் இல்லை" என்று கூறி இருக்கிறார்.

அவர் அவ்விதம் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது; ஒன்று அவர், அவருடைய கட்சிக்காரர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும் என்பது, மற்றொன்று நமது கழகத் தோழர்களுக்கு மனக் கசப்பு உண்டாக்க வேண்டும் என்பதாகும்; இதில் அவர், அவருடைய கட்சிக்காரர்களைப் பொறுத்தவரையிலே எதிர்பார்த்த பலனைப்பெற்றிருக்கக்கூடும்; நமது கழகத் தோழர்களைப் பொறுத்த வரையில் அவர் கசப்பூட்டும் நோக்குடன் பேசியது கேட்டு, நம்மில் யாரும் நாடி நரம்பு தளர்ந்துபோய் "ஐயகோ! நாம் ஏதோ பெரும் பலம் பெற்றுவிட்டோம் என்று பேசித் திரிகிறோமே, தேர்தலில் ஈடுபடவும் திட்டமிட்டு விட்டோமே, நமக்கு எங்கும் பலமே இல்லையா—தாமே, எல்லாவற்றையும் அறிந்தவர் என்று கூறத்தக்க நிலைக்கு உயர்ந்துள்ள காமராஜரே இதனைக் கண்டறிந்து கூறிவிட்டாரே! இனி என்ன செய்வது?" என்று கதறிக்கொண்டிருக்கப் போவதில்லை, செயலற்றுப் போய்விடவும் மாட்டோம். நமக்கு உள்ள பலம் நமது கொள்கையிலும், அதனை எடுத்

★ நாடகமாடிடலாம்....(2)

துரைக்க நாம் மேற்கொள்ளும் முறையிலும், அந்த முறை பிறருக்கு வேண்டுமென்றே பெரும் பீதியும் அருவருப்பும் தரத்தக்கதாக இல்லாமல், பலரையும் அருகே ஈர்த்திடத்தக்கதான பண்புடையதாகவும் அமைந்திருப்பதையும் பொறுத்திருக்கிறது. இதனை நாம் செய்து வருகிறோம்—செம்மையாகச் செய்து வருகிறோம்-நாளுக்கு நாள் நமது முறையிலும் திறத்திலும் முன்னேற்றமும் மக்களை நம் பக்கம் கொண்டு சேர்க்கும் தன்மையும் வளர்ந்து வருகிறது என்பதை எந்தக் கட்சியிலும் காணக்கிடைக்கும் ஏற்புடையோர் எடுத்தியம்புகின்றனர். நமக்குப் புரிகிறது! எனவேதான் காமராஜர், நமக்கு எங்கும் பலம் இல்லை என்று கூறுவது, பொருளற்றது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, நாம் நமது பணியினைத் தொடர்ந்து நடத்துகிறோம்;

தி. மு. க. வுக்கு எங்கும் **பலம் இல்லை**—என்று கூறிடாமல், தி. மு. க. வுக்குப் **பணம் இல்லை** என்று காமராஜர் கூறியிருந்திருந்தால், பெருமூச்சுடன் ஆமய்யா, ஆம்! என்று நாம் ஒப்புக்கொள்வோம்!

ஆனால் காமராஜர் அகராதியில்—அரசியலுக்காகத் தயாரிக்கப்பட்ட தனி அகராதியில், பலம் என்பதற்குப் பணம் என்று பொருள் இருக்கும் போலும்!

பணத்தால் கிடைக்கக் கூடிய பலம் நமக்கு இல்லை என்பது உண்மை; அத்தகைய பலம் நமக்கு இல்லை என்று கூறிக்கொள்வதிலே நாம் வெட்கப்படத் தேவையுமில்லை!

இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருளைக் கொள்ளை அடிப்பவனைப் பிடித்துக் கொடுக்கும் போலீஸ்காரர், சம்பளம் எவ்வளவு பெறுகிறார்!

தேர்தலில் தித்திப்பு மொழி பேசிடும் எத்தர்களிடம் பொது மக்கள் சிக்கிச் சீரழியாதபடி பாதுகாக்கும் பணியாற்றக் கிளம்பு கிறோம், நம்மிடம் இதற்குப் பெரும்பொருள் தேவையில்லை, உள்ளத்தில் தூய்மையும், கொள்கையில் உறுதியும், அக்கொள்கையைப் பரப்புவதற்கான முறையில் ஓர் பண்பும் இருந்தால் போதும்.

பணம், படைக்கலன் அல்ல என்று நான் கூறவில்லை தம்பி, படைக்கலன் அது ஒன்றுதான் என்று எண்ணுவது பேதைமை, பெரும்பிழை என்றுநான் கூறுகிறேன்.

பணம் படைத்தவர்கள் தேர்தலில் கையாளும் முறைக்கும் அது அற்ற நாம் கையாளும் முறைக்கும், இந்தத் தேர்தலின்போது கடும் போட்டி இருக்கத்தான் போகிறது.

சென்ற கிழமை, அதுபற்றித்தான் குறிப்பிட்டேன், பணம் படைத்த காங்கிரஸ் கட்சி அள்ளிக்கொடுத்து, அம்புவிழி மாதரையும் கரும்பு மொழி ஆடவரையும் கலைத்துறையில் கண்டறிந்து பயன்படுத்தும், நாம் அந்தக் காரியத்தில் நாமே ஈடுபடவேண்டும், நாட்டு மக்களுக்கு நல்லறிவும் அரசியல் தெளிவும் தரத்தக்க நாடகமாடிடலாம் என்று குறிப்பிட்டேன்.

இது, அதற்கான ஆர்வம் உனக்கு ஏற்பட ஒரு தூண்டுகோல்; முழு நாடகமல்ல!!

பெரிய மனிதர்களின் போக்கு, அரசியல் பிரச்சினையில் எப்படி இருக்கிறது என்பதை மக்களுக்குக் காட்டிட ஒரு வழி.

எந்த தனிப்பட்டவரையும் இழிவுபடுத்தும் நோக்கத்துக்காக அல்ல, அரசியலைப் பெரிய மனிதர்கவ என்போர் எவ்வளவு 'இலாவகமாக' உபயோகித்துப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதை விளக்கவே இதுபோன்ற நாடகங்கள். இனி நாடகத்தைப் படித்துப் பார், தம்பி,………

பெரிய மனிதர்கள்...!

இடம்:- ஈரோடு
இரயில்வே ஸ்டேஷன்

இருப்போர்:- செட்டுக்காரர்
அவர் கணக்காளர்
பணியாட்கள்
போர்ட்டர்
சின்னன்

காலம்:- 1940

நிலைமை:- ஈவை மாவட்டத்தில் கீர்த்தி வாய்ந்த குடும்பத்தினரான, செட்டுக்காரர், சின்னயம்பதி செல்வதற்காகக் ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு வருகிறார்.

சில்க்குக் கோட்டும், ஜரிகை அங்கவஸ்திரமும், காதில் வைரக் கடுக்கனும் விரல்களில் வைர மோதிரங்களும் அணிந்துகொண்டு இருக்கிறார்.

கணக்காளர்; கவலையுடன் அவர் பின்னேடு வருகிறார். பளுவான பெட்டிகளையும், படுக்கையையும் தூக்கிக் கொண்டு பணியாட்கள் வருகிறார்கள்.

வெள்ளிக் கூஜாவும், பழக்கூடையும் எடுத்துக் கொண்டு, ஒரு பணிப்பெண் வருகிருள்.

ரயில்வே ஸ்டேஷனில் வருவோரும், போவோரும், செட்டுக்காரரைக் கண்டு, மரியாதை காட்டுகிறார்கள். அவர்கள் போடும் கும்பிடுகளைக் கவனியாதவர்போல செட்டுக்காரர் இருக்கிறார். பெட்டி படுக்கையை, வண்டிக்குள்ளே எடுத்துவைக்க போர்ட்டர் சின்னன் வருகிறன்.

செட்டுக்காரருடன் பணியாள் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு, தனக்குப் 'பிழைப்பு' இல்லை என்றெண்ணி வருத்தப்படுகிறன்.

புரோகிதர் புண்யகோடீஸ்வரர், மேல்மூச்சு வாங்கும் நிலையில் ஓடிவருகிறார். அவரைக் கண்ட, செட்டுக்காரர், சிரித்தபடி……

செட்டுக்காரர்:- என்ன சாமி!

புண்யகோடீஸ்வரர்:- [பச்சைச் சிரிப்புக் காட்டியபடி...] என்ன கஷ்டகாலம் போங்கோ! தலை தெறிக்க ஓடி வரவேண்டி நேரிட்டுவிட்டது. பாழாப்போன ரயில் எங்கே கிளம்பிடறதோண்ணு, பயம்...

[சொல்லிக் கொண்டே கையில் உள்ள சிறு பையைத் திறந்து, அதிலிருந்து, குங்குமப் பிரசாதத்தைத் தருகிறார்.

செட்டுக்காரர், பயபக்தியுடன் அதை நெற்றியில், அணிந்து கொண்டபடி...]

செட்:- இதுக்காகவா குடல் அறுந்துபோகிறபடி ஓடி வந்தீர். அடப்பாவமே! இன்னும் அரை மணி இருக்கே ரயில் புறப்பட......

புண்:- நேக்கு என்ன தெரியும்! ரயில் இந்நேரம், கிளம் போயிருக்கும்னு, அவ பயம் காட்டினா......

செட்:- யார் ஐயரே, உம்மைப் பயம் காட்டினவ...?

புண்:- நம்ம பாகு...!

செட்:- அவளை எங்கே பார்த்தீர்? வீட்டண்டே போயிருந்தீரா?

புண்:-என்ன, அப்படிக் கேட்டு விட்டீர்? நான் எதுக்காக அவ வீட்டுக்குப்போகப்போறேன்? செட்டுக்காரர் கால் மறுபடியும் பட்டாலொழிய அவ, வீட்டு வாசப்படியை மிதிக்கப் படாதுன்னு சங்கல்பம் செய்துண்டு இருக்கேன்......நான் அவ ஆத்துக்குப் போவனா... அவ வந்திருந்தா, அம்பா சன்னதிக்கு...நான் அர்ச்சனை செய்துண்டு, பிரசாதம் வாங்கிண்டிருந்தேன்.......தெரிஞ்சுண்டா......அவதான், சதா, உம்ம சங்கதியைச் சகலமும் விசாரிச்சுண்டு இருக்காளே! "என்ன ஸ்வாமீ! இங்கே இப்படி காலகரணம் செய்துண்டிருக்கீரே, இந்நேரம் செட்டுக்காரர் கிளம் போய்ச் சேர்ந்திருப்பாரேன்னு சொன்னா. பயந்தே போயிட்டேன். அங்கே பிடித்த ஓட்டம், இங்கே படி ஏறும் போது தான் நின்னுதுன்னு வையுங்கோ...

செட்டு:- அடபாவமே! என்னாலே, உமக்கு மெத்தச் சிரமம்...

புண்:- இது ஒரு பிரமாதமான சிரமமா...இன்னக்கி அலங்காரம் கண்ணைப் பறிச்சுட்டுது போங்க......

செட்:- அவளுக்கென்னய்யா மகா தளுக்குக்காரியாச்சே ...பதினெட்டு வயது குட்டி போலத்தான் இருப்பா...

புண்:- தாங்கள் யாரோட அலங்காரத்தைப் பத்திப் பேசறேள்?

செட்:- எல்லாம் அந்த பாகுவோட அலங்காரத்தைப்பத்தித் தான்...

புண்:- சிவ! சிவ! நான், அம்பாளோட அலங்காரத்தைச் சொன்னேன்.

செட்:- அடடே! நான் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டேன்...

புண்:- ஆனா, ஒருவகையிலே பார்த்தா பாகுவோட அலங்காரம், அம்பாளோடே போட்டி போடறது போலத்தான் இருந்ததுன்னு சொல்லணும்...

செட்:- போமய்யா, அவளைப்பத்தி நீர் எப்பவுமே இப்படித்தான் பிரமாதமாப் புகழ்ந்து பேசறது......

புண்:- கண் இருக்கு, பார்க்க, பொய்பேச மனசு கேட்கறதில்லை...உம்! கிரஹம் சரியாக இல்லாததாலே, அவளோடு மனஸ்தாபம் ஏற்பட்டதே தவிர, உமக்கு அவமேலே பிராணன் என்கிறது, நேக்குத் தெரியாதா?

[பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும்போக்கில் இருக்கும் போர்ட்டரைப் பார்த்து]

செட்:- ஏண்டா, மரமாட்டமா நிற்கறே...சாமான்களை எடுத்து வண்டியிலே வையேன்...

[போர்ட்டர் மகிழ்ச்சியுடன், சாமான்களை எடுத்துவைத்துக் கொண்டிருக்கிறான்]

புண்ய:- கின்னையம்பதியிலே எத்தனை நாள்?

செட்:- நாளை மறுநாள்தானே கவர்னர், டீபார்ட்டி, அது முடிந்ததும், புறப்பட வேண்டியதுதான்.

புண்:- என்ன விசேஷம், டீபார்ட்டிக்கு...

செட்:- கவர்னரோட குதிரை, பந்தயத்திலே ஜெயித்தது, அதற்காக, சேட் தர்மசந்த் இந்த டீபார்ட்டி ஏற்பாடு செய்திருக்கான்...

புண்:- என்ன சொல்லுங்கோ... அவன், எத்தனைபெரிய சேட் நடத்தற டீபார்ட்டியாகவேனுமானா இருக்கட்டும், போன வருஷம், நடத்தினீர் பாரும், டீபார்ட்டி, அதைப்போல, இனி ஒருவனாலும் நடத்தவே முடியாது. அட அடா! ஊரே, பிரமாதம்! பிரமாதம்னு, பேசிண்டுது...

செட்:- டீபார்ட்டி, ரொம்ப அருமையாத்தான் இருந்தது. ஆனா, திருஷ்டி பரிகாரம்போலே, இந்த காங்கிரஸ்காரப் பயல்கள் கொஞ்சம் 'கலாட்டா' செய்து விட்டானுக...

புண்:- கவர்னர், ரொம்ப வருத்தப் பட்டாரோ...?

செட்:- அதெல்லாம் இல்லே...... எல்லாம் வெளியூர்லே இருந்து கூலிகொடுத்துக் கொண்டு வந்தானுக, நம்ம ஊர்லே, எவனும் காலித்தனம் செய்ய மாட்டானு கன்னுசொன்னேன். திருப்தியாத்தான் பேசினார்...ஆனா, நம்ம ஊர் பசங்களும், வரவர தலையாட்டலாயிட்டுதுங்க...

புண்:- சும்மா, வயித்துச் சோத்துக்கு வழி இல்லாததுகளெல்லாம் வந்தே மாதரம்னு

வரட்டுக் கூச்சல்] போடறதுகள், வேறே என்ன...?

[போர்ட்டர் பணிவாக]

போர்:- வந்தேமாதரம் சொல்கிறவங்க, வயித்துச் சோத்துக்கு வழியத்தவங்கன்னு சொல்லிவிடலாமுங்களா? மகாத்மா காந்தி, ஜவர்லால் நேரு, இப்படிப்பட்டவங்களெல்லாம், வயித்துச் சோத்துக்கு வழி இல்லாதவங்களா......

[செட்டுக்காரர் கோபம் கொள்கிறார்.

கலெக்டர், வருவதைக் கண்டுவிட்டு

அவரை எதிர்கொண்டு அழைக்கிறார்.

கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.]

கலெக்டர்:- சீலமா......?

செட்:- இல்லே, சின்னையம்பதிக்குத் தான்...... எப்படி இருக்குது ஊர் நிலைமை...... என்னமோ சத்தியாக்கிரகம்......ன்னு தொலைஞ்சுதா...லீடர் வேஷம் போடற ஆளுகளை பிடிச்சு, அஞ்சு வருஷம், பத்து வருஷம்னு, ஒரு பத்துப் பேருக்குத் தீட்டி விட்டா, பயல்களெல்லாம், பெட்டிப் பாம்பாகிவிடுவானுக......

கலெக்:- ஆமாம்...... ஆனா நிதானமா நடந்துகொள்ளச் சொல்றது, கவர்மெண்டு...

[வந்தேமாதரம்!
மகாத்மா காந்திக்கு ஜே!
தேசபக்தன் திருமலைக்கு ஜே!

என்ற கோஷம் கேட்கிறது.

எதிர்ப்பக்கமிருந்து, கிருச்சி வண்டி வந்து நிற்கிறது.

எல்லோரும், பரபரப்புடன் அங்கே ஓடுகிறார்கள்.

வண்டியிலிருந்து, திருமலை எனும் காங்கிரஸ் தொண்டன் இறங்குகிறான். மாலைகள் போட்டு, வரவேற்கிறார்கள்.

போர்ட்டர் சின்னான் ஒரு கதர் மாலை போடுகிறான்.

இதற்குள் போலீஸ்படை வருகிறது.

கலைந்து செல்லும்படி உத்தரவு இடுகிறது.

மக்கள் ஆர்வத்துடன் ஜெயகோஷமிடுகிறார்கள்.

போலீஸ் தடியடி நடத்துகிறது.

மக்கள் சிதறி ஓடுகிறார்கள்.

போர்ட்டர் சின்னானுக்கு நெற்றியில் இரத்த காயம் ஏற்படுகிறது.

மெள்ளத் தப்பித்துக் கொண்டு செட்டுக்காரர் இருக்கும் பக்கம் வருகிறான்.

கலெக்டர், விடைபெற்றுக்கொண்டு செல்கிறார்.

போர்ட்டர் நெற்றிக் காயத்தைக் கண்ட...]

புண்:- என்னடா இது, பாவிப் பயலே!

போர்ட்:- (சிரித்தபடி) ஏன் சாமி! அடித்தவனைப் பாவி என்கிறதா, அடிபட்டவனைப் பாவின்னு சொல்றதா...?

புண்:- வக்கணை கிடக்கட்டும்...... நோக்கு என்னடா அங்கு வேலை......? அங்கேதான், அடித்து விரட்டறாளே, ஏன் அங்கே போகணும்னேன்...?

போர்:- என்னமோ, மனசு கேட்கலே, போனேன்; திருமலை, பாவம், மூணு மாசமாச்சி, ஜெயிலுக்குப் போயி, என் சினேகிதனோட மவன், ரொம்ப நல்லப் பையன்......

செட்:- யாரு... அந்தத் திருட்டு விழி திருமலையா...? என்ன அவனுக்கு? ஜெயிலிலே இருந்து வெளியேவிட்டாச்சா? சரி! இனி ஊர்லே ஒரே ரகளை தான்... டே! நீ, போர்ட்டர் தானேடா? கூலிக்காரன் தானே! சாமானைத் தூக்கித் தானே பிழைக்க வேண்டியவன்...

போர்:- ஆமாங்க... வயித்துப் பிழைப்புக்கு எது செய்தா என்னங்க? அள்ளக் கூடாது திருடக் கூடாது...

செட்:- சீ! கழுதே! கூலிக்காரப் பயலுக்கு, அந்தக் கும்பலோட என்னடா வேலை... பெரிய லீடர் அந்தத் திருமலை... நீ போனயோ, அவனைத் தரிசனம்செய்ய...

புண்:- (அசட்டுச் சிரிப்புடன்) இதோ, தரிசனம் செய்துண்டு பிரசாதமும் வாங்கிண்டு வந்திருக்கான் பாருங்கோ...

செட்:- போட்டதே போட்டானுங்களே, பார்த்துச் சரியா மண்டையிலே போடப்படாதா...? எனக்கு மட்டும் ஒரு ஆறு மாதம் 'பவர்' கொடுத்தா, இந்தப் பயல்களிலே ஒரு பத்துப் பேரை, கடைத் தெருவிலே நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளுவேன், மத்தப் பயல்களெல்லாம், வாலை மடக்கிக் கொள்ளுவானுங்க.

போர்:- (சிறிது கோபமாக) என் கூலியைக் கொடுங்கய்யா...... சுட்டுத் தள்ளுவதும் வெட்டிப் போடறதும் உங்க இஷ்டம்... கூலியைக்கொடுங்க... போயி, ஏதாவது, தடவித் தொலைக்கணும், இந்தக் காயத்துக்கு...

செட்:- என்னடா ஒரு தினுசாகப் பேசறே—திமிரு பிடிச்சிருக்குதோ...கதர்ச்சட்டை போட்டதுமே இந்தக் கந்தப்பயல்களுக்குக் கண் மண் தெரியறதில்லை... எவனோ சொல்லிவிட்டானாம் கதர் போட்டா போதும், வெள்ளைக்காரா ஓடிப் போவான்னு...

போர்:- வேண்டாமுங்க...மகாத்மாவைப் பத்தி இழிவாப் பேசாதிங்க... பாவமுங்க...

புண்:- டே! பாவ புண்யத்தைப் பத்தி நோக்கு என்னடா தெரியும், மண்டு! கூலி வேலே செய்து பிழைக்கிற உனக்கெல்லாம் ஏன் இந்தக் காரியம்னு அவர் சொன்னுரே தவிர, மகாத்மாவையா இழிவாப் பேசறுர்?

செட்:- (கோபமாக) என்ன ஐயரே? அந்தப் பயகிட்ட என்னமோ விளக்கம், சமாதானம் பேசநீர்! ஏ! ஏலே, டே! இதோ, இப்படிப் பாருடா! மகாத்மாவைக் கூடத்தான் கேவல மாய்பேசறேன் என்ன செய்து விடப் போறிங்க...? தலையைச் சீவி விடுவிங்களா......?வெடிகுண்டு கொண்டு வந்து என் மோட்டார் மேலே போடுவிங்களா! வெட்டிப் பசங்களா! வெள்ளைக்காரனை ஒட்டிடப் போறிங்க இல்லே, வீரப் புலிக! துப்பாக்கியைத் தூக்கினு, காததூரம் ஓடிப்போறிங்க, வாய் மட்டும் இருக்கு வந்தேமாதரக் கூச்சல்போட. சுயராஜ்யம் வரப்போகுது இல்லே, உங்களோட கூச்சல் கேட்டு? அறிவு கெட்ட பயலுக! அவன் வந்துதானேடா, இந்த நாட்டுக்கே 'யோகம்' பிறந்தது... அவனிடம் போய், வாலாட்டினு, ஒட்ட நறுக்கி...

போர்:- வெள்ளைக் காரன் கூட இப்படிப் பேசமாட்டான் போலிருக்குதுங்களே!அவனே கூட, இது உங்களோட தேசம் தான், நான் அந்நியன் தான். போகத்தான் போறேன், ஆனு கொஞ்சம் பொறுத்துப் போறேன்னுதான் சொல்றுனும், நீங்க ஒரே அடியா, எங்களை முட்டாளுக, காலிப் பசங்க, என்றெல்லாம் ஏசிப்பேசறிங்க ...ஏனுங்க, வீணு ஊரெல்லாம் ஒரு வழியாப் போனு, நீங்க நேர்மாருப் போகணும்...

[செட்டுக்காரர்கோபமாக போர்ட்டரின் கன்னத்தில் அறைந்துவிடுகிருர்.

இரயில் புறப்படுகிறது. செட்டுக்காரர் ஏறிக் கொண்டு ஒரு நாலணு சில்லறையை வீசுகிருர். அதைப் பொறுக்கி எடுக்கவும் மனமின்றி,கண்கலங்கி நிற்கிருன் போர்ட்டர். பணிப்பெண்சில்லறையைப் பொறுக்கி எடுத்து, போர்ட்டரிடம் கொடுத்து விட்டு...]

பணி:- உனக்கேன் அண்ணேன், அவரோட விரோதம்... அவரோட சுபாவம் அறியாமப் படிக்குப் பேசி, வீணு தொல்லையைத் தேடிகிட்டயே...

புரோ:- ஏண்டி குட்டி! இவன் எல்லோரிடமும் பேசறது போலே அவரோடு பேசலாமோ! ஒரு பெரிய மனுஷன், சர்க்கார் கட்சின்னு தெரிஞ்ச பிறகு, அவனண்டை எப்படி நடந்துக் கொள்ளணுமோ அப்படின்னு நடந்து கொள்ளணும்.

பணி:- அண்ணனுக்குத் தெரியுமா உங்களுக்குத் தெரிஞ்ச நெளிவு சுளிவெல்லாம்...அது பாவம், மனசுலே பட்டதை பட்டுப்பட்டுன்னு பேசிடுது...

புரோ:- செட்டுக்காரர், ராவ்பகதூர் வரும்னு பிளான்போட்டு வேலேசெய்துண்டு இருக்கார்; இப்ப போறது கூட கவர்னர் டிபார்ட்டிக்குத்தான்; அவர் எதிரே வெள்ளைக்காரன் ஒழியணும்னு பேசினு கேட்டுண்டு இருப்பாரோ! கலெக்டரும் கவர்னரும், பொதுவா சர்க்காரே, அவருக்கு வேண்டியவா...

போர்:- இருக்கட்டுமே.........அதனுலே...நம்ம நாட்டிலே அந்நியன் ஆளக்கூடாதுன்னு கேட்கக் கூடாதா, கேட்காதவன் மனுஷ ஜென்மந்தானு! என்னமோ, பட்டம் பதவி, ஒரு பத்துப்பேருக்கு வீசிப் போட்டுவிட்டா, போதுமா, மக்களெல்லாம் பஞ்சத்திலே அடிபட்டு தேஞ்சிபோறுங்க, மாண்டுபோறுங்க...

புரோ:- அதுக்கு, இவரை என்னடா செய்யச் சொல்றே...?

போர்:- இவரை என்ன செய்ய சொன்னுங்க! என்ன செய்ய தெரியும் இவருக்கு? என்னைட்டம் இளிச்சவன், ஏதோ அகப்பட்டா, அடித்து கொடுமைசெய்யத் தெரியும்... ஏனய்யா, செய்யமாட்டாரு... பக்கமேளம் அடிக்கத்தான் நீங்க இருக்கறிங்களே...

பணி:- ஏன்யா, ஐயர்சாமி! ஐயாவுக்கு ஏத்தபடி பேசி, சுயருஜ்யமாவது கத்தரிக்காயாவதுன்னு சொல்லிவிட்டு இந்த அண்ணன், கதர் போடுது காலித்தனம் செய்யுதுன்னு சொல்ருரு, நீயும் கூடச் சேர்ந்து இட்டு ஆமாமாம்னு சொல்றியே, உன் மகன், காந்தி தொப்பி போட்டுகிட்டு, கொடி தூக்கிகிட்டு கடைத் தெருவிலே பாடிக்கிட்டுப் போவுது, ஊர்கோலத்திலே.......என்ன, செய்தே...ஏசினயா...?

புரோ:- சரி, வாயை மூடித்தொலே எவன் காதிலாவது விழப் போறது...நான் என்ன, சுயராஜ்யம் வேண்டாம்; மகாத்மாவை மதிக்கப்படாது; கதர் கட்டப்படாது; என்றெல்லாம் துஷ்பிரசாரமா செய்யறேன். இதெல்லாம் விஷம்னு கருதிண்டு, இந்த விஷயத்திலே ஈடுபட்டவாளை விரோதின்னு எண்ணிண்டு இருக்கார் செட்டுக்கார்—அவரோட அந்தஸ்த்து, ஐஸ்வரியம், செல்வாக்கு, இதெல்லாம் சாமான்யமோ! அப்படிப்பட்டவரோட விரோதத்தைத் தேடிண்டு கெட்டுப்போகலாமோ....எப்பவும் சர்க்காரை எதிர்க்கிற வாளைக் கண்டா, பெரிய மனுஷாளுக்குப் பிடிக்காது. பெரிய மனுஷா அப்படித்தான்...

பணி:- அது நெசம்தான்—பெரிய மனுஷனுங்க அப்படித்தான், அவங்க கிட்டெ இளிச்சி இளிச்சிப் பேசறவங்களுக்குத்தான், கேட்டது கிடைக்குது ...அண்ணேன், ஐயர் ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரரு!

எங்க செட்டுக்காரரை பாகு இருக்காளே, அடே அப்பா, மகா தளுக்குக்காரி, அவளாலேயே கூடச் சரிப்படுத்த முடியறதில்லே......., சண்டை போட்டுக்கருரு...ஐயர் தெரியுமா, செட்டுக்காரரைச் சொக்குப்பொடிபோட்டு வைச்சிருக்காரு... சரியண்ணேன்! ஏன் இப்படி திகைத்து நிற்கிறே? பெரிய மனுஷனுங்க, அப்படித்தான்.

போர்:- ஆமாம் குழந்தை! திருமலை கூடச் சொல்லியிருக்கான், பெரிய மனுஷனுங்க இப்படித்தான், சர்க்கார் தாசனுங்களாத்தான் இருப்பாங்க. கொள்கை, குணம், எதுவும் இருக்காது. என்ன செய்தா என்ன இலாபம் கிடைக்கும் என்கிறதிலேதான் குறி இருக்கும்னு...

[கவலையுடன் செல்கிருன்]

புரோ:- உலகம் போற போக்கு தெரியாத பய........பெரிய மனுஷாளோட பகையைத் தேடிண்டா, நல்லதா?

பணி:- யார் சொல்லுவாங்க அப்படி! சாமி, நீ, ஒரு பள்ளிக்கூடமே வைச்சி நடத்தலாம் ....

புண்:- (கொஞ்சும் பாவனையில்) போக்கிரி! என்ன, கேலி செய்யறே......

பணி:- ஆளுக்குத் தகுந்தபடி பேசறது, வேலைக்கு ஏத்தபடி நடக்கறது, சமயத்துக்குத் தகுந்தபடி வேஷம் போடறது, அதாலே, என்ன இலாபம்னு கணக்குப் போடறது, இந்த வித்தையைக் கத்துக்குடுக்க ஒரு பள்ளிக்கூடமே நடத்தலாம், போ......

புண்:- இரு, இரு.....உன்னைவந்து ......(கொஞ்சும் பார்வை செலுத்துகிருர்)

பணி:- (கேலியாக) ஐய்யே...வாலிபம் திரும்புது......அழகு சொட்டுது......அட என்யா, இப்படி ஆடு திருடினவன் போல விழிக்கறே...அதுக்கு வேறே ஆளைப்பாரு...

[போகிருள்]

[திரையில்
1940
1941
1942
1943
என்று ஆண்டுகள் ஓடுவதைக் காட்டிவிட்டு 1953-க்கு வந்து சேருவதாக விளக்கமளித்துப் பின்னர், புதிய காட்சி]

இடம்:- ஈரோடு
ரயில்வே ஸ்டேஷன்.

இருப்போர்:- செட்டுக்காரர்
பணியாள்
புரோகிதர்
போர்ட்டர்
பணிப்பெண்.

நிலைமை:- [செட்டுக்காரர், துல்லிய கதருடை அணிந்துகொண்டிருக்கிருர்.

வைரம், வழக்கம்போல் மின்னுகிறது.

பெட்டி, படுக்கையைப் பணியாளிடமிருந்து வாங்கி வண்டியில் வைக்கிருன் போர்ட்டர் சின்னுன்.

சின்னுன் வயது முதிர்ந்ததுடன் வறுமையில் அடிபடுவது தோற்றத்தில் தெரிகிறது.

பணிப்பெண், வயது ஏறிய போதிலும், வசீகரம் இழக்காத தோற்றத்துடனும், தைரியம் கொண்ட போக்கிலும் தென்படுகிருள்.

புண்யகோடீஸ்வரர் வயோதிகம் மேலிட்டிருப்பதுடன், முன்பு இருந்ததைவிட அதிக வைதீகக் கோலத்துடன் காணப்படுகிருர்.

ரயில்வே ஸ்டேஷனில் போகிறவர், வருகிறவர்களை செட்டுக்காரர், புன்னகை காட்டி, சொந்தம் கொண்டாடுகிருர்.]

புண்:- போகிற காரியம் ஜெயமாகணும்னு, அம்பாளுக்கு அர்ச்சனை செய்துண்டுதான் வந்திருக்கேன். அவகை விடமாட்டா, இந்தாருங்கோ...

[குங்குமப் பிரசாதம் தருகிருர். பயபக்தியுடன் நெற்றியில் வைத்துக் கொண்டு]

செட்:- போன மாதம் மகாநாடு நல்ல முறையிலே நடந்ததற்கு நான்தான் காரணம் என்பது முதல் மந்திரிக்குத் தெரியும் இல்லையா...

புண்:- ஆமாம்...நம்ம பிச்சு சொன்னுன்...இந்தப்பக்கத்திலேயே செட்டுக்காரர் போல தங்கமான ஆசாமியை நான் பார்த்ததே இல்லைன்னு சொன்னுராம்...

செட்:- யார்? முதல் மந்திரியா? அப்படியா? பிச்சு கேட்டுக் கொண்டிருந்தானுமா...?

புண்:- கேட்டுண்டு சும்மா இருப்பானு! அவன்பாட்டுக்கு இதுதான் சமயம்னு, செட்டுக்காரர், மஹா தர்மிஷ்டர், பெரிய உபகாரி, இந்தப் பக்கத்துக்கு அவர் ஒரு ராஜா மாதிரி, அவரோட செல்வாக்கு வேறு ஒருவருக்கும் கிடையாது, அப்படி இப்படின்னு வெளுத்து வாங்கி இருக்கான்....

செட்:- பிச்சுமணிக்குச் சொல்லியா தரவேணும்...

புரோ:- அதனுலேதான், முதல் மந்திரி, அவன் காதோடு காதாக, இரகசியமாச் சொன்னுராம், இப்படிப்பட்டவங்க, மந்திரியாகணும்னு...

செட்:-[வெட்கப்படுவதுபோலாகி] போய்யா.....அவர் அப்படியா சொல்லி இருப்பாரு...மந்திரி வேலைக்கு நானுன்னு சொல்லி இருப்பாரு......நான் இன்னும் சரியா அவருக்குப் பழக்கம் கூட ஆகல்லே......

புண்:- அதென்ன அப்படிச் சொல்றீர். பழக்கம்னு என்ன, வருஷக் கணக்கா பழகவேணுமா ...?

செட்:- அதல்லய்யா.........மந்திரி வேலைன்னு, அது ஜெயிலுக்குப்போன பெரிய தலைவர்களுக்கு, தியாகம் செய்தவாளுக்குன்னுதானே சொல்லுவாங்க...நான், இப்பத்தானே காங்கிரசு......நம்மைப் போயி மந்திரியாக்கணும்னு...

புண்:- சரியாப் போச்சுப் போங்க! ஜெயிலுக்குப் போனாத்தானா? மத்தவாளெல்லாம், தேசத்துக்குப் பாடுபடலேன்னு அர்த்தமோ! மந்திரி வேலையை வகிக்கறதுன்னா கீர்த்தி, செல்வம், செல்வாக்கு அந்தஸ்த்து, கெம்பீரம், ராஜகளை, இலட்சணம், இதெல்லாம் வேணுமா, தடியடி பட்டேன், ஜெயிலுக்குப் போனேன், இது போதாதான்னு கேட்கறதா...?

[போர்ட்டர் சின்னான் கூலிக்காக வந்து நிற்கிறான்.]

இதோ, இந்த சின்னான் கூடத்தான் தடியடி பட்டவன், இவனை ரயில்வே மந்திரியாக்க வேணுமோ, உம்மோட வாதப்படி பார்த்தா.

செட்:- போர்ட்டர்! என்ன ஊர்லே காங்கிரஸ் எப்படி இருக்கு... அடே! என்ன இது கதர்ச் சட்டை காணோம்...

சின்னான்:- கதர்ச் சட்டைங்களா... இல்லிங்க...அது நம்ம உடம்பிலே பொருந்தலிங்க...

செட்:- கட்சி மாறிவிட்டயா...... காங்கிரஸ் காங்கிரஸ்ன்னு தலைமேலே தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவயே, முன்னை எல்லாம். இப்ப என்ன இப்படி கெட்டுப்போயிட்டே...

போர்:- நான் கெட்டுப்போகலிங்களே, காங்கிரஸ் கட்சிதான், எங்களை விட்டுவிட்டுப் போயிடிச்சி...

செட்டு:- உன் வாயாடிக் குணம் மட்டும், மாறமாட்டேங்குது... இப்ப என்ன நீ, கழகமாயிட்டயா?...

போர்:- கழகம், எங்களவங்களுது ஆயிட்டுதுங்க...

புண்:- என்னடா, இப்படி ஏட்டிக்குப் போட்டியாப் பேசிண்டிருக்கே. இப்ப, நம்ம எஜமானரு, காங்கிரசாயிட்டார், தெரியுமோன்னோ...

போர்:- தெரியுமுங்க...

புண்:- முன்னே அவருக்குக் காங்கிரஸ் பக்தி வேணும்னு சொன்னவனாச்சே நீ, இப்ப நீயே காங்கிரசை விட்டுப் போயிட்டேன்கிறயே......என்னடா காரணம்?

போர்:- காரணம் என்னங்க? 'எஜமானரு'காங்கிரசாயிட்டாருன்னு நீங்களே சொல்லிவிட்டிங்களே, போதாதுங்களா! காங்கிரசும் 'எஜமானருங்க கட்சியாயிட்டுது; நாங் ஏழை பாழைங்க, ஏனுங்க இனி, இந்தக் காங்கிரசுக்கு...

செட்:- (கோபமாக) ஓஹோ! மண்டைக் கர்வம் பிடிச்சாச்சு பயலுக்கு. காங்கிரசை ஒழிச்சிடப் போறயோ... ஏண்டா! கழகம்! நீ, எதிர்த்தாச்சு, இனிக் காங்கிரஸ் தலை எடுக்காது, ஏண்டாப்பா, அது தானே உன்னோட எண்ணம்.

புண்:- கிடக்கிறான், விட்டுத் தள்ளுங்கோ, கழகம்னு எப்ப ஆச்சோ, அப்ப இவன், மட்டு மரியாதையா நடக்கமாட்டான் ஏதாவது துடுக்குத்தனமாப் பேசுவான்.

செட்:- பேசுவான்... பேசுவான்... இழுத்துக்கொண்டு போய், செம்மையா உதை கொடுக்க சொன்னா, என்ன செய்வானாம்! வயித்துச் சோத்துக்கு வக்கு இல்லை, மூட்டை சுமந்து பிழைக்க வேணும், இதுகள், அரசியலிலே புரட்சி செய்யப் போவுதாம், காங்கிரசைக்கவிழ்த்துவிடப்போறானுங்களாம்... அகில உலகமே நடுநடுங்குது நேரு பேர் கேட்டா......

போர்:- (குத்தலாக) அது உண்மைதானுங்க... அகில உலகம் என்னங்க, எங்களுக்கே கூட பயம்தானுங்க, நேரு பேர் கேட்டாலே...மனுஷன் என்னென்னெல்லாம் சொன்னாரு, ஏழைஎளியவங்கசார்பா, இப்ப, மாட்டிகிட்டி முழிக்கிறாரு, முதலாளிங்ககிட்ட...

செட்:- டேய் வாயை மூடமாட்டே.... மரியாதையா நடந்துக்கோ, தெரியுதா...

போர்:- மந்திரி வேலை இப்பவே வந்த மாதிரியாத்தான் இருக்கு, ஐயா, பேசறது பார்த்தா...

[திருமலை வாழ்க!

திராவிடநாடு திராவிடருக்கே!

சிறைக்கஞ்சா சிங்கம்

திருமலை வாழ்க!

என்ற முழக்கம் கேட்கிறது.

திருச்சி வண்டியை நோக்கிப் பலர், ஆர்வத்தோடு செல்கிறார்கள்.

போர்:- யாருன்னு பார்க்கறிங்களா... திருமலைதான்... நம்ம திருமலையேதான்...... முன்னாலே காங்கிரஸ் தொண்டனாக இருந்து ஜெயிலுக்குப் போனானே... இதோ, என் நெற்றியைப் பார்த்தா தெரியுமே... அவனேதான், கல்லக்குடி கிளர்ச்சியிலே ஜெயிலுக்குப் போய் திரும்பி வருகிறான்...

செட்:- அவனும் இப்ப காங்கிரசிலே இல்லையா...?

போர்:- இடம் கிடையாதுங்களே! ஏழை பாழை, தியாகம் செய்தவன், அடிபட்டவன் உதைபட்டவன், ஜெயிலுக்குப் போனவன், சீரழிந்தவன், இவங்களுக்கெல்லாம், இப்ப, ஏதுங்க காங்கிரசிலே இடம்!! அதனால் நீங்களெல்லாம், கொலு இருக்கறிங்களே...

புண்:- கோபமூட்டி, வம்புக்கு இழுக்கிறதுன்னே, தீர்மானிச்சுண்டு பேசறியா...

செட்:- பேசட்டும், சாமி, பேசட்டும் வேறென்ன தெரியும் இதுகளுக்கு, கத்துகத்துன்னு கத்தத் தெரியும். பாருங்களேன் அதுங்க போடற கூச்சலே. ஏண்டாப்பா, கல்லக்குடி கிடைச்சுடுச்சா, உங்க திருமலே ஜெயிலுக்குப் போய் வந்ததும்...

போர்:- கல்லக்குடி இன்னும் கிடைக்கல்லிங்க, ஆனா மானத்தைப் பத்தின அக்கரை எங்களுக்கு இருக்குதுன்னு, ஊர் உலகம் தெரிஞ்சுகிட்டுதுங்க. எங்கேயோ இருந்து வந்த வடநாட்டுக் கொள்ளைக்காரர் பேராலே இங்கே ஊர் இருக்கறது அவமானம் என்கிறதை எல்லோருமே தெரிந்து கொண்டாச்சிங்க...

[போலீஸ்! போலீஸ்!
என்று புண்யகோடீஸ்வரர் கூக்குரலிடுகிறார்
போலீஸ் வருகிறது. செட்டுக்காரரைப் பார்த்துச்சலாம் வைக்கிறார்கள்,]

செட்:- இந்தப் பய, கழகமாம்... காலித்தனம் செய்கிறான்.

[போலீஸ், போர்ட்டரை இழுத்துச்செல்கிறது.
இரயில் புறப்படுகிறது. செட்டுக்காரரும் புரோகிதரும் வண்டியில் ஏறி அமருகிறார்கள்.
வண்டி சென்ற பிறகு.]

போலீஸ்:- சரி, போய்யா.... பெரிய மனுஷனுங்ககிட்ட ஏன்யா, வம்பு... அவனுங்க பேச்சுன்னுதான் இப்ப காங்கிரஸ் வேதமா எடுத்துக்கிட்டு, உத்தரவு போடுதே — காலம் போற போக்கு தெரியாமே...

போர்:- பெரிய மனுஷனுங்க அப்படித்தான், அண்ணேன் அப்படித்தான்! முன்னே காங்கிரஸ் இருட்டிலே உலவின போது, கண்டபடி ஏசிகிட்டு, வெள்ளைக்காரன் காலைக் கட்டிப் பிடிச்சுகிட்டு கிடந்தானுங்க, இப்ப, காங்கிரசு துரைத்தனம் பண்ண ஆரம்பிச்சதும், அதைக் கட்டி பிடிச்சுகிட்டு கொட்டமடிக்கிறாங்க...

போலீஸ்:- அதுக்கென்ன செய்யறது...பெரியமனுஷனுங்க அப்படித்தான்......எப்பவும் சர்க்கார் பக்கமாத்தான் இருப்பானுங்க...

போர்:- அவங்களை நான் குறை சொல்லலே, அண்ணேன்! இரத்தம் கொட்டி, கண்ணுக்குக் கண்ணா மதிச்சித் திருமலே போன்றவங்க உழைச்சி வளர்த்தது காங்கிரசு. அது இப்ப, ஊரை அடிச்சி உலையிலே போடறவங்க பக்கம் சேர்ந்துகிட்டு, திருமலே போன்றவங்களை, தேளாக் கொட்டுது...

போலீஸ்:- சரி! சரி! போ! போ!

பணிப் பெண்:- அண்ணேன் இந்த மட்டோடு போச்சேன்னு சந்தோஷப்படு. இப்ப எங்க எஜமானருக்கு கெவர்மெண்டிலே, எப்பவும் இல்லாத அளவு செல்வாக்கு கலெக்டருக்கு ஒரு கால் காகிதம் கொடுத்தனுப்பிச்சா, பறந்துகிட்டு வாராரு......உன் மனசோட போட்டு வைய்யி, மந்திரிவேலை வரப்போவுது இவருக்கு......

போர்:- அது சரிம்மா, அது ...சரி பணத்தைக் கொட்டறாரு இல்லையா, இப்ப காங்கிரசுக்கு, அதனாலே...

பணி:- நீ ஒரு பைத்யம்......பெரிய மனுஷனுங்க, பணம் செலவு செய்தா, ஒண்ணுக்குப் பத்தா திரும்பிவருமுன்னு உறுதியாத் தெரிஞ்சாத்தான் செய்யறானுக. பத்து வருஷத்துக்கு முன்னே, எஜமானர் பட்ட கடனெல்லாம், இப்ப தீர்ந்து போச்சி, இப்ப இவரு பத்து, பேருக்குக் கடன் கொடுக்கலாம் போயேன், பணம் பெருத்துப் போச்சி. சர்க்கார் தயவு இருந்தா, சீமானவருங்க...

போர்:- ஆமாம்மா, ஆமாம்! திருமலே கூடச் சொன்னான் காங்கிரஸ் ஆட்சியிலே இலட்சாதிகாரி கோடீஸ்வரனாகிறான், ஏழை ஏங்கித் தவிக்கிறான்னு......

பணி:- நமக்கு அந்த எழவெல்லாம் எங்கே புரியுது. பெரிய மனுஷனுங்களுக்கு, எந்த மாதிரி ராஜாங்கம் வந்தாலும் அதுக்கு, கையைக் காலைப் பிடிச்சுவிட்டு பிழைக்கத் தெரியுது......

போர்:- கொழுக்க தெரியுதுன்னு சொல்லம்மா, கொழுக்கத் தெரியுது...

[போகிறான்]

தம்பி! நாடகம் நடத்தச் சிரமமில்லை; அனுமதி பெறுவதில் சிரமம் ஏற்படக் கூடும்.

எனினும், தேர்தலுக்காக நாடாள்வோர் நாடகம் நடத்த ஏற்பாடு செய்யும்போது, நாம் இது போன்ற நாடகங்களை நடத்தியாக வேண்டுமல்லவா! நடத்தக் கூடியதில் இது ஒன்று; கோடிட்டுக் காட்டினேன். உன் நண்பர்களுடன் கலந்து பேசினால் வேறு பல நாடகங்கள் உருவாகும். நாடகமாடி நாட்டுக்கு அறிவிக்க வேண்டிய உண்மைகள், அரசியல் நிகழ்ச்சிகள் ஏராளமாக உள்ளன. அவ்வப்பொழுது தெரிவிக்கிறேன். அத்தகைய நாடகங்களை நடத்துவதற்கு அனுமதி கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று என்னைக்கேட்டு, இக்கட்டில் மாட்டிவிடாதே, பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொள்ளடா அப்பா, பொல்லாதவனாயிற்றே, நீ.

அன்பன்,

அண்ணாதுரை

என்னென்பது!

"வெள்ளைக்கார சரிதாசிரியர்களின் கற்பனை!" என்கிருர், ஆச்சாரியார்.

"ஆம்! ஆம்! ஆரியராவது, திராவிடராவது" என்கின்றனர், பூணூலணியும் விழாவை ஆண்டுதோறும் நடத்தும் அவர் குலத்துப் பெரியமனிதர்கள்.

ஆண்டுக்குப் பத்துலட்சத்தைக் கொட்டிக் கொண்டிருக்கும் கவர்னர் பிரகாசா "இதுபற்றி சரித வல்லுநர்கள் திடமான முடிவுக்கு வரவேண்டும்" என்று சந்தேகம் தொனிக்கப பேசினுர் முன்போர் முறை.

ஆரியம், திராவிடம்-இரண்டைப்பற்றிய பிரச்னைகளை விளக்க சரித ஆதாரங்கள் மட்டுமல்ல, கண்முன் நடக்கும் சம்பவங்களே போதும். சமஸ்கிருதத்தை யார் போற்றுகிருர்கள்! தமிழுக்காக யார் வாதாட முன்வருகிருர்கள்!—தெரியுமே, இதைச் சிந்தித்துப் பார்த்தால். ஆரியம், விதைக்காது விளையும் கழனி! வேத மூட்டைகளை விற்றுப் பிழைத்திடும் கூடாரம். திராவிடம், உழைத்து ஓய்வது—ஆரிய முறைகளை நம்பி, தன்னைத்தானே அழித்துக் கொள்வது.

பஞ்சகச்சம் ஆரிய முறை! "ஆத்துக்கு-நோக்கு, நேக்கு" ஆரியம், அக்கிரகாரம் அமைப்பது ஆரியம்; பூணூல் போட்டுக்கொள்வது ஆரியம்; சாதி பேதத்தை யூட்டுவது ஆரியம்,

பார்ப்பனர்கள் மட்டுமல்ல, இந்த முறைகளைத் தாமும் மேற்கொண்டால், தாங்களும் உயர்சாதிக் காரர்களாகிவிடலாம் என்று உறுமும், முதலியாரும் நாயுடுவும் ஏனையோரும் கூட, நமது கருத்துப்படி கண்டித்துத் திருத்தப்படவேண்டியவர்களே.

அதனுல்தான், திராவிடநாட்டில் அனைவருக்கும் வாழ்வளிப்போம்; உயர்வு தாழ்வு கருதாத அனைவருக்கும் உரிமைகள் அளிக்கப்படும். திராவிடநாடு, நாம் நமது நாட்டுக்கு இடும் பெயர். திராவிடநாடு என்று சொல்வதால், அங்கு திராவிடர் மட்டுமே வாழ்வர், ஆரியரை வங்காளக் குடாக்கடலில் போட்டு அமிழ்த்திவிடுவோம் என்று அர்த்தமல்ல என்று தெளிவுபடுத்தி வருகிறோம்.

ஆச்சாரியார் போன்ற குதர்க்கவாதிகளுக்கும், பிரகாசா போன்ற சந்தேகிகளுக்கும் பதிலளிக்கிறது, சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர்.

இத்திங்களில், அங்கு புதைபொருள் ஆராய்ச்சியினர், சில பொருள்களைத் தோண்டியெடுத்திருக்கிருர்கள்—அந்தப் பொருள்களைக் கவர்னரும் சென்று கண்டிருக்கிருர்.

அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருள்களைப் பற்றி ஜே. டி. கர்னீலியஸ் என்பார் இந்து ஏட்டில் எழுதுகிருர். கர்னீலியஸ், தென்னிந்தியா புதைப் பொருளாராய்ச்சிச் சங்கத் துணைத் தலைவர். அவர் எழுதுகிருர்,

"உலோகங்களை எப்படி உபயோகிப்பது என்பதை ஆரியர்கள் வருவதற்கு முன்னரே, தெரிந்துகொண்டிருந்தவர்கள் திராவிடர்கள் என்பதில், சிறிதளவும் சந்தேகம் கிடையாது".

1952ல் வியன்னுவில் உலக தொல்பொருளாராய்ச்சியாளரின் மகாநாட்டில் ப்யூரர் ஹெய்மன்டிராப் எனும் பேரறிஞர் சொன்னுர்: திராவிடர்கள் யார் தெரியுமா? அவர்கள்தான், இந்தியாவிலேயே முதன் முதலில் இரும்பை உபயோகிக்கும் வித்தையைக் கண்டுபிடித்தவர்கள். அவர்கள் தெற்கே இருந்தவர்கள்"

இரும்பை முதன் முதலில் உபயோகப்படுத்தியவர்கள் திராவிடர்கள். இவர்கள் இந்தியா முழுவதிலும், ஆரியர் தம் வருகைக்கு முன் பரவியிருந்ததை அண்மையில் சிந்து கங்கைச் சமவெளியில் கண்டெடுத்த புதை பொருள்கள் கூறுகின்றன, என்கிருர் கர்னீலியஸ்!

"கல், உலோகம் முதலிய புதைபொருள்கள் மூலம், ஆரியர்தம் வருகைக்கு முன், திராவிடர்கள் எங்கெங்கே இருந்தார்கள் என்று பார்த்தால் பீகார்—ஐக்கிய மாகாணம், அஸ்ஸாமில் ஒரு பகுதி, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், குஜராத், பம்பாய், மலபார், திருவாங்கூர் கொச்சி, சென்னை முதலிய எல்லா இடங்களையும் திராவிடஸ்தான் என்றே சொல்லவேண்டும்!"

சொல்வது கர்னீலியஸ்; புதைபொருள் ஆராய்ச்சி சங்கத் துணைத் தலைவர்—அவர், தி.மு.க. அல்ல.

பஞ்சாபைக் கழித்துவிட்ட மிச்ச பகுதியையெல்லாம், திராவிடஸ்தான் என்றே சொல்லலாமாம்! ஏனெனில் அங்கெல்லாம், ஆரியர் வருகைக்கு முன் திராவிடர்கள் குடியேறி வாழ்ந்தனர் என்பதை புதைபொருள்கள் நிரூபிக்கின்றன!!

நமக்கு அவ்வளவு பேராசைகூட இல்லை, கர்னீலியஸ் குறிப்பிடும் அந்த இடங்களையெல்லாம், ஆரியம் தன் வசமாக்கிவிட்டது—தன் மொழியால் வளைத்து விட்டது—தனது மத முறைகளால், அடிமைப் படுத்தி விட்டது.

ஆனுல் அன்று முதல் இன்றுவரை தாழாது நிற்பது தெற்கும் அதனுடைய சொந்த மொழியான தமிழும்தான்! இந்தத் தமிழ் அரசோச்சும் பகுதியும், அத்தமிழின் செல்வங்களான சேரனும், சோழனும், பாண்டியனும் உலவிய பரப்பும், தமிழின் குழந்தைகளான தெலுங்கும், மலையாளமும் கன்னடமும், உலவுகின்ற பூபரப்புமான, இம்மாநிலத்தைக் கேட்கிறோம், தனி நாடாக!

அதற்குமன்றோ, எதிர்ப்பும் ஏளனமும் கிளப்புகிருர்கள்.

"வடநாடு, வளர்ந்துவிட்டது. ரொம்பச் சரி! தென்னுடு, நீ சொல்வதுபோல, பாலைவனமாகத்தான் ஆகி வருகிறது. உண்மைதான். ஆனுலும், நீ, ஆரியம் திராவிடம் என்று பேசுவது அழகல்ல......" என்றன்றோ மறுப்புரையும் அருவருப்புரையும் அளிக்கின்றனர்.

கர்னீலியஸ் கூறுகிருர், திராவிடஸ்தான் என்பது இந்தியா முழுமையுமே அடங்குமாம்! பண்டைத் தொடர்புப்படி பார்த்தால்! அந்தத் தொடர்பில் தூசு படிந்து ?ட்டதால், மாசற்று விளங்குவதும் மனுவுக்குப் பதில் வள்ளுவர் நெறி அரசோச்சுவதுமான ஒரு பூபாகத்தைத் தனி நாடாக்க விரும்புகிறோம்.

அதையும் மறுப்பவர்களை, என்னென்று சொல்வது!!

முகப்பு விளக்கம்...

“பௌஜாடே”

[அரங்கண்ணல்]

“கொல்லன்! தச்சன்! கூலிவிற்போன்! காய்கறிக் கடைக்காரன்! காசற்றவன்! கசாப்புக் கடை வைத்திருப்பவன்! தலைசுமைக்காரன்! இவர்கள் தேர்தலில் நிற்கப்போகிருர்களாமய்யா, நிற்கப் போகிருர்களாம். என்ன ஆசை பார்த்தீரோ?”

—கூறுபவரின் குரலில் மட்டுமல்ல, கண்களிலும், கேலியும் ஏளனமும் காட்சியளிக்கிறது.

“ஊம்! பரிதாபத்துக்குரியவர்கள் — ஏதோ, ஒரு சபலம். எத்தனை ஆண்டு காலமாய் அரசியலிலிருக்கிறேம். இது போன்ற தேர்தல்களில், எத்தனை தடவை பழக்கப்பட்டிருக்கிறேம். புதிதாக நிற்கப்போகிற இவர்களுக்குத் தேர்தலைப்பற்றி என்ன தெரியும்? பாபம் பார்த்தால் கொஞ்சம் புத்தி சொல்லுங்கள்!”

—கொஞ்ச மிடுக்கோடு, அதே நேரத்தில், கொலைகளத்துக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டினைப் பரிதாபமாகப் பார்ப்பார்களே, அது போன்ற பார்வையுடனும் இப்படிச் சொல்கிருர்.

“என்ன திட்டம் வைத்திருக்கிருர்களாம், இவர்கள்? தேர்தலில் நிற்க, எமது திட்டம் இது என்று அறிவித்து விட்டார்களா! நான் டஜன் கணக்கில், எனது திட்டங்களைச் சொல்லப்போகிறேன். எனது கட்சியோடு, எதிர்த்து நிற்க முடியுமா?”

—போட்டிக் குரலுடன், ஆவேசத்துடன், உறுமினர், மற்ருெருவர்.

* * *

“ஆமய்யா, தேர்தலில் நிற்கப்போகும் நாங்கள் சாதாரணமானவர்கள்தான் — நீங்கள் சொல்லுவதுபோல...”

“நீங்கள் கூறுவது நிஜம்தான் — எங்களுக்கு, உங்களைப்போல தேர்தல் அனுபவம் கிடையாதுதான்.”

“திட்டம் என்ன என்று கேட்கிறீர்களா? உண்மையைச் சொல்லுகிறேன், இதுதான் எமது திட்டம் என்று கூற ஒன்றும் கிடையாது, எம்மிடம்.”

* * *

ஏளனம், கேலி, மிரட்டல், வாதமிட வந்தோர் அனைவருக்கும் அவன் அமைதியாக இப்படித்தான் பதிலளித்தான்! அரசியல் மேடைகளிலே, எதிரிகள் விடுத்த இந்தக் கணைகள் எதனையும் அவன் ஏற்க அஞ்சவில்லை. நான் ஏழைதான்; என்னுடைய சகாக்கள் நீங்கள் கூறுவதுபோல மிகமிகச் சாதாரணமானவர்கள்தான்! இதுவரை, தேர்தலில் நின்று பழக்கமில்லைதான். திட்டம்கூட தீட்டி உமக்கெல்லாம்தர வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள்தான். என்ருலும்......என்று, எடுத்துரைத்தான்.

அவர்கள், அவனைப் பார்த்துக் கேலியை வீசினர். அவன், அவர்களைப் பார்க்கவுமில்லை, அவர்களுக்குப்பதிலிறுக்கவிரும்பவுமில்லை; அதற்குப் பதிலாக மக்களைப் பார்த்தான்—கடல் மடை திறந்ததுபோல், கர்ச்சித்தான்.

“ஏற்றம் பெற்றிருந்தோம் ஒரு காலத்தில். உலக முழுதுக்குமே, நாம் ஊட்டிய பெருமைகள் அனந்தம். ஆனுல், இன்ரு, மக்களே, நாம் புறக்கணிக்கப்பட்டுவிட்டோம். நம்மை ஆள ஒரு சர்க்கார் இருக்கிறது. சர்க்காரா அது? சர்க்காரா அது?”

அவன் கேட்கும் தொனியினுல் மட்டும் அல்ல. உண்மையிலேயே நாட்டை ஆண்ட சர்க்கார் ஊழல் நிறைந்ததாயிருந்தது, அதனுல் மக்கள் சிரித்தார்கள், அவன் பேச்சை ரசித்தார்கள், கை தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

“பாரிஸ்! அடடா, ஒருமுறை சென்று பாருங்கள் அங்கே. மதுகோப்பைகள் உருளும்; சதைப் பொதிகள் பணத்தை அள்ளிப்போட்டுக்கொண்டு பவனிவரும். உலகமே இன்று கேலி செய்கிறது. விபசார விடுதி என்று அழைக்கிறது. அவ்வளவுமோசமாகிவிட்டது. காரணம்? பணம் புரள்கிறது, அங்கே. நாம் கொட்டிக் கொடுக்கும் வரிப்பணம் அதிகாரிகளாலும், ஆளவந்தவர்களாலும் இந்தக் காரியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது.”

யாரும், இவனைப்போல இத்தனை நாளும் எடுத்துச் சொல்லவில்லையே தவிர ஒவ்வொருவருக்கும் பாரிசைப் பற்றியும், அங்கு பணம் படைத்தோர் கோலாகல வாழ்க்கையை அனுபவிப்பது குறித்தும், ஆலையதிபர்கள் அட்டகாசம் செய்யும் விபரங்களையும், அவர்களுக்கு அனுசரணையாக ஆட்சியாளர் கிடப்பதும், தெரியும். தெரிந்ததை இவன் எடுத்துச் சொல்லவே, எல்லோரும் ஆம், ஆம் என்றனர்.

“கேளுங்கள், மக்களே, கேளுங்கள்! இங்கு உழைத்து, ஒருவேளை ஒழுங்காகச் சாப்பிட அல்லாடும் நம்மிடம் வரிகளை வாங்கிக் கொண்டு போய் நம்ம சர்க்கார் என்ன செய்கிறது தெரியுமா? அல்ஜீரியாவில் போர் நடத்துகிறது. அந்த நாடு, இவர்கள் பிடியை விட்டுப்போகக்கூடாதாம்—அதற்காக நம்மைக் கசக்கிப்பிழிந்து பணம் வசூலித்து, குண்டாகவும் துப்பாக்கியாகவும் கொண்டுபோய்கொட்டுகிருர்கள்! இது தேவையா? அவசியமா? பெரிய சாம்ராஜ்யம் என்று பிறர் போற்றுவதால் நமது வயிறு நிரம்பிவிடுமா?”

இதுவும், உண்மைதான். பிரெஞ்சு சர்க்கார், ஏழை எளியவர்களிடமும், அங்காடிக் கடைகளிலும், கெடுபிடி செய்து வசூலித்த வரிகளையெல்லாம் வாரி விட்டுக் கொண்டிருக்கிறது, போருக்கு! அல்ஜீரியா போய் விட்டால் சாம்ராஜ்யப் பெருமை போய் விடுமாம்—அதனுல், வீம்புக்கு விரயம் செய்கிறது, பணத்தை. அதே சமயத்தில், மக்கள் தேய்கிருர்கள். தேம்பி யழுவதும் திகைத்து நிற்பதும் பழக்கமாகி விட்டது சமூகத்தில். பிரான்சில், பல மாகாணங்கள் உண்டு — ஒவ்வொன்றுக்குள்ளும் நுழைந்து பார்த்தால், வேதனையும் ஏழ்மையும் அதிகம். அதிலும், பிரான்சின் தென் பகுதிக்குள் சென்று விட்டால் போதும், ஒரே வறுமைதான்,

1953 ஜூலையில் ஒரு கொல்லருக்கு சர்க்காரிடமிருந்து வரி நோட்டீஸ் வந்தது. அந்தக் கொல்லர், இவனுடைய ஊரான செய்ண்ட் கிரியில் இருந்தவர். வரியைக் கொடுத்துவிட்டால், அவர் ஓட்டாண்டியாக வேண்டியதுதான், அவர் மட்டுமல்ல, நாட்டிலுள்ள தொழில் செய்வோரின் கதியே அப்படித்தானிருந்தது. வரிகொடுக்கக் கூடிய சீமான்களேயும், பூமான்களேயும், ஆலேயரசர்களேயும், சர்க்கார் நெருக்கலாம்; ஆனல் அப்படிச் செய்யாமல் ஏழை எளியவர்கள் தலேயிலேயே (நமது காங்கிரஸ் சர்க்காரின் விற்பனே வரியைப்போல) பல வரிகளேப் போட்டுச் சுரண்டிக்கொண்டிருந்தார்கள். இந்த அநீதிக்கு, புத்தகம் தூக்கி விற்பவனுயிருந்த இவனும் ஆளானவன்தான். இப்படி சர்க்கார் கொடுமைப்படுத்தவே, பலர் பொய்க் கணக்கு காட்டி வரியினின்றும் தப்ப முயன்றனர் — அப்படிச் செய்தால்தான், வரியின் கொடுமையிலிருந்து மீளலாம் போலிருந்தது. ஆகவே பொய்க்கணக்கு, வரிகொடாமல் ஏமாற்ற முயலல் எனும் காரியங்கள் சகஜமாக நடக்கலாயின. இதற்கான அடிப்படைக் காரணத்தை அறிய முயலாமல், சர்க்கார், ஒவ்வொருவரும் இவ்வளவு வரி கட்ட வேண்டும் என்று குத்து மதிப்பு போட்டு குடையலாயிற்று.

இந்நிலேயில் தனக்கு வந்த நோட்டீசைக் கண்ட கொல்லர், என்ன செய்வதென்று ஏங்கினுர். தன்னேப் போல சிறு தொழில் நடத்தியவண்ணம் அக்கிராமத்தில் பிழைத்துக் கொண்டிருந்த இன்னும் 26-பேருககு இப்படி நோட்டீஸ் வந்திருப்பதாகக் கேள்வியுறவே, அவர்களேயும் அழைத்துயோசித்தார்! அதன் விளேவாக மறுநாள் வரி வாங்கவந்த இரு சர்க்கார் அதிகாரிகள், விரட்டப்பட்டார்கள். கிளர்ச்சிக்காரர்களே முன்னின்று நடத்த பௌஜாடே எனும் பெயர்கொண்ட இவன் முன்வந்தான் காட்டுத்தீயென சம்பவம் நாடெங்கும் பரவிற்று, பல இடங்களிலும் இதுபோல வரிவாங்கவந்த அதிகாரிகள் விரட்டப்பட்டனர். பௌஜாடேயின் பெயர் எங்கும், யாவரது நாவிலும் நடமாடலாயிற்று. பிரான்சில் வாழும் 800000, ஏழைகள், இவனேயே தமது தலேவன் எனக் கொண்டனர்—ஒரு புதிய கட்சியே, உருவாகும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

“நம்மிடம் இப்படிக் கொடுமைப் படுத்தி வரிவாங்குகிற சர்க்கார், சீமான்களிடம் வாங்குகிறதா?”

“இப்படிக் கொடுமைப்படுத்தி வரிகளே வாங்கி நமக்காவது செலவழிக்கிறதா சர்க்கார்? இல்லேயே! டுனீஷியாவையும் அல்ஜீரியாவையும் அடக்க இராணுவத்துக்குத்தானே செலவழிக்கிறது!”

என்று உரத்த குரலில் ஒவ்வோர் ஊராகச் சென்று பேசலானுன். அதில், உண்மையும் இருந்ததால், மக்களும் அவனே ஆதரிக்கத் தலேப்பட்டனர். எங்கும், ‘வரிகொடோம்’ எனும் குரல் வலுக்கலாயிற்று.

வரிகொடுக்காதவர்களின் சொத்துக்களேச் சர்க்கார் கைப்பற்றி, ஏலம் போட்டது. பௌஜாடேயின் முயற்சியால், அத்னே எவரும் ஏலம் எடுக்க முன்வருவதில்லே—அவனே அதற்கென நிதி திரட்டி ஆயிரம் ரூபாய் பொறுமான முள்ளதை நூறு ரூபாய்க்குமேல் ஏலம் போகாமற் செய்தான். இப்படி ஒரு ஊரில் மட்டுமல்ல, எங்கும் நிகழலாயிற்று.

> ஆண்டொன்றுக்கு சீமான்கள் சர்க்காருக்குக் கட்டாமல் ஏய்க்கும் வருமான வரியின் தொகை ரூபாய் **முப்பது கோடி** என்று டில்லி பார்லிமெண்டில் சர்க்காரால் கூறப்பட்டுள்ளது.

“1945-ல் நாம் பிரான்சை விடுத்தோம்; இப்போது நாம் பிரெஞ்சு மக்களே விடுவிக்கப் போராடுகிறோம்” என்று கூவியபடி, இந்த வரிக்கொடுமைகளே நீக்குமாறு அறைகூவல் விடுத்தான்—அப்போது பிரதம மந்திரியாயிருந்த எட்கார்பாரேயைச் சந்தித்து வலியுறுத்தினுன். பணியாத சர்க்கார் இவனது பல கோரிக்கைகளே ஏற்கவேண்டியதாயிற்று. எனினும் அதனே வெளிப்படையாகக் காட்டிக்கொண்டால் கித்தாப்பு குறையுமல்லவா, அதனுல் சில கோரிக்கைகளே மட்டும் நிராகரித்தது.

அதைச் சுட்டிக் காட்டி மீண்டும் மின்னல் வேகத்தில், பௌஜாடே கிளம்பினுன் நாட்டுக்குள். திகைத்த பிரதமர், ஆளேயனுப்பி சமரசம் பேசச் சொன்னுர்.

என்ன பணம் கேட்டாலும் உனக்குக் கொடுத்துவிடுகிறேன், இப்படியெல்லாம் பேசாமல் ஒதுங்கிவிடு, என்று அவனே விலேக்கு வாங்கவும் முயற்சித்தார்.

பணமட்டுமல்ல, உனக்கு பொருளாதாரக் கவுன்சிலில் ஒரு இடமும் தருகிறேன் என்று தூதுவிடுத்தார்.

அவன், அவரை ஏளனமாகப் பார்த்துவிட்டு, நீதிக்காகப் போராட ஆரம்பித்தான். ஒரே ஒரு ஆண்டுக்குள் UDCA என்று அழைக்கப்படும் “கடைகாரர்கள், சிறு தொழில்புரிவோரின் பாதுகாப்புச் சங்கம்” எனும் அவனுடைய கட்சி, பொதுத் தேர்தலிலும் போட்டியிட முன்வந்தது.

819 இடங்களில் அவன் தனது அபேட்சர்களே நிறுத்திவைத்தான், வெற்றி பெற்ருேர் 53-பேர்தான் என்ருலும், அவனுக்கு பிரெஞ்சு அரசியலில் நல்லதொரு எதிர்காலமுள்ளது என்று யாவரும் கணிக்கும் நிலே ஏற்பட்டுவிட்டது.

ஏனெனில், ஏழை எளியதுகளுக்காகப் பாடுபடும் கம்யூனிஸ்டுகளும் சோஷியலிஸ்டுகளும் கூட, அவனே தமக்கு எதிராக முளேத்திருப்பவன் என்று மனதுக்குள் கருதுகின்றனராம். ஆனுல், அவன், தன்னுடைய முயற்சிக்கு ஊக்கமளிக்குமாறு அவர்களேயும் அழைக்கிருனும்.

இவ்வளவு பெரிய தேர்தலில் ஈடுபட அவன் தெரிந்தெடுத்திருந்த தேர்தல் அலுவலகம் சின்னஞ்சிறு ஓட்டலின் மாடியறை ஒன்றுதானும், பணமல்ல, நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதே அரசியலில் முக்கியம் என்றுஎடுத்துரைத்த பௌஜாடே இன்று உலக ஏட்டில் கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய ஒரு உருவமாகிவிட்டான்.

அடிக்கடி அரசியல் குழப்பங்களால் அல்லாடும், பிரான்சு, இவனது கைக்குள் சிக்கும் நிலேக்கு ஆளானுலும் ஆளாகக்கூடும்.

“வடக்கு போய்ப் பாருங்கள்! பெரிய ஆலேகளேக் கட்டிக்கொண்டு சுகமாக வாழ்கிருர்கள் பணக்காரர்கள். நமக்குத்தான், யாரும் நாதியில்லே, கவனிக்க?”

என்று, நாட்டு நிலேமைகளே எடுத்து அவன் விளக்க விளக்க, வேங்கைபோலாயினர் மக்கள். சதுர்வித உபாயமறிந்தோரெனக் கருதிக் கொண்டிருந்தோர், தங்களாலன்றி

யாரால் அரசியல் கட்சிகளை நடத்த இயலும் என்று கருதியோர், பணபல மற்றோர் ஏது செய்ய முடியும் என்று நினைத்துக் கிடந்தோர், ஏமாளிகள் என்று இவர்களை நினைத்தோர், அனைவரும் ஏளனமும் கேலியும் செய்தனர். ஆனால், மக்கள், நாட்டின் வாழ்வையும் வளத்தையும் நிர்மாணிக்கும் மக்கள், மணி மகுடங்கள் உருளவும் மீளவும் வழிகாட்டியாக யிருக்கும் மக்கள் என்ன தீர்ப்பளித்தார்கள் தெரியுமா?

தலைகாய்ந்ததுகள் என்று சீமான்களாலும், பணபலமும் பிரச்சார பலமுமிக்க கட்சிகளாலும் வர்ணிக்கப்பட்ட இவர்களில் 53 பேரை ஆளும்சபைக்கு அனுப்பினார்கள்! மொத்தம் 26 இலட்சம் ஓட்டுகள் அவனது கட்சிக்குக் கிடைத்தன!!

கேலி பேசியோர் கண்களில் மிரட்சி ஏற்பட்டது. கித்தாப்பை வீசியோர் அருவருப்போடு பார்க்கலாயினர், பழுத்த கட்சி, பல்லாண்டுக் கட்சி, பணம் படைத்த கட்சி; பலம் மிகுந்த கட்சி என்று கருதப்பட்ட அனைத்தும், இவர்களின் வெற்றியைக் கண்டு வியப்பும் சந்தேகமும் கலந்து பார்க்க ஆரம்பித்தன.

"இனி சட்டசபை, மீன் சந்தையாகத்தான் ஆகப்போகிறது".

"சட்டசபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், மக்கள் குறைகளை விளக்குவதெவ்விதம், என்று கூட அறியாதவர்கள் வந்துவிட்டார்களய்யா."

"அற்பர்கள், பாரேன், காலம் போகிற போக்கை!"

இதுபோல பகிரங்கமாகவே பேசலாயினர். தேர்தலில் ஏற்பட்ட தோல்வி ஒரு பக்கம், இல்லாததுகள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு கட்சி அமைத்து விட்டனவே எனும் எரிச்சல் இன்னொரு பக்கம், இப்படி 'இஞ்சி தின்றது'களைப் போலாயினர்.

அவன், அவர்கள் கூற்றுகளைப் பற்றி, கவலைப்படவில்லை. அமைதியோடு, "ஆமய்யா, ஆம். நீங்கள் கூறுவது போல நாங்கள் அனுபவமற்றவர்கள்தான். ஆனாலும், எமது மக்களுக்காக எப்படிப் பாடுபடப் போகிறோம் பாருங்கள்," என்று கூறினான். சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட 53 பேரையும் ஒரிடத்தில் கூட்டினான் — எப்படியெப்படி சபையில் நடக்க வேண்டுமென்பதை பழக்க 'வகுப்புகள்' நடத்தினான். இன்று, அவர்கள் பிரெஞ்சு நாட்டுப் பாராளுமன்றத்தில், சிறப்போடு வீற்றிருக்கிறார்கள்.

பாரிசுக்கு ஏழு மைலுக்கு அப்பாலுள்ள சிறு குக்கிராமத்திலிருக்கும் அவனுடைய சிறு வீட்டிலிருந்து போனை எடுத்துப் பேசினால், 48 மணி நேரத்தில், பிரான்சு நாடு முழுதும் அவன் கூறியது அச்சடிக்கப்பட்டு சுவர்களிலெல்லாம் காட்சியளிக்கிறது. சட்ட சபை உறுப்பினர்கள் ஓடி வருகிறார்கள். அவன் நடாத்தும் **இரண்டு** பத்திரிகைகளில் எழுதும் எழுத்தை பிரெஞ்சு நாடே, கூர்ந்து கவனிக்கிறது.

இத்தனைக்கும் அவன், சாதாரண வாழ்க்கையில் திளைக்கும் வசதியைக் கூடப் பெற்றவனல்ல. புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்றவன். இப்போது, அவனுக்கு இருப்பதெல்லாம் ஒரு பலசரக்குக் கடைதான். இரண்டாவது உலகப் பெரும் போரின் போது, இங்கிலாந்துக்கு வந்து விமானப் படையில் சாதாரண வீரனாகப் பணியாற்றி யிருக்கிறான்—பிரெஞ்சு நாட்டு பிரபுக் குலமல்ல, சாதாரணக் குடியானவ குலம். தோற்றமும், உடையும், மிகமிகச் சாதாரணம். மேல் நாட்டார் அணியும், 'கூட்'யினைக்கூட அவன் கட்டிக்கொள்ளுவதில்லை — இருக்கும் இல்லமோ, ஒரு 20 பேர் வந்துவிட்டால் தங்க முடியாது.

எனினும், அவன் இன்று ஒரு மாபெரும் தலைவனாகிவிட்டான். தினசரி, அவனது புதிய கட்சியில் சேர்வதாக எண்ணற்ற விண்ணப்பங்கள் வந்த வண்ணமுள்ளன.

எத்தனையோ பழம்பெரும் கட்சிகள் நிரம்பிய பிரான்சில், இவனுக்கும் செல்வாக்கு வரும் என்று யாரும் நம்பவில்லை. ஒரு நாளைக்கு இவனே நாட்டையாளும் அமைச்சனானாலும் ஆகலாம் எனும் கருத்து இப்போது உதயமாகி வருகிறது. அவனும் திட்டமாகத் தெரிவிக்கிறான்,

> "அடுத்த மாதம் அல்லது அடுத்த வாரம், வேண்டுமானால் நாளைக்கே பொதுத் தேர்தல் நடத்திப் பாருங்கள். 60 லட்சம் மொத்த ஓட்டுகளை வாங்கிக் காட்டுகிறேன். 200 பேர், ஜெயித்து வரும்படிச் செய்கிறேன்".

இப்படி இவன் திடமாகத் தெரிவிக்கத் தைரியமூட்டியது, கடந்த தேர்தல்தான். அவன் தேர்தலில் நிற்கப்போவதாக முடிவு கட்டியது, தேர்தலுக்கு இரண்டு திங்களுக்கு முன்புதான்.

> இரண்டே இரண்டு மாத காலத்தில், இவ்வளவு பெரிய வெற்றி, யாரும் எதிர்பாராத வெற்றி.

காரணம், பலமும் பணமும் படைத்திருந்ததல்ல, மக்களின் சுகதுக்கங்களைப் பங்கு கொண்டு வாழ்பவன் — அவர்களுக்காக எதனையும் செய்யும் சுபாவம் பெற்றவன் — என்பதை, அவர்களுக்கு எடுத்துரைத்ததுதான்.

அவன் அரசியலுக்குள் நுழைந்ததே, ஒரு விசித்திரமான சம்பவமாகும். ★

"இந்து சமூகத்துக்கு தீங்கிழைத்தது, சதுர்வர்ண சித்தாந்தம்தான்! அதனால்தான் இந்தியரும் சீர்குலைந்தனர். ஆண்டாண்டு காலமாக, கோடிக்கணக்கான மக்கள், 'புனர் ஜன்மம்', 'கர்மவினை' என்கிற இந்து வேதாந்தங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டார்கள். இப்படிச் சொன்னவர்கள் பெரிய சாதிக்காரர்கள், சமூகத்தைச் சுரண்டவும், அவர்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்தவுமே இவ்வண்ணம் செய்தார்கள், ஏதோ சில பொருளாதார அமைதிகளைத் தருவதினாலும் சமூக உரிமைகளை வழங்குவதாலும் பிரச்னை தீர்ந்துவிடாது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள், சமூகத்தில் தங்களுக்கிருக்கும் இழிநிலை குறித்து அதிருப்தியடைய வேண்டும், மனித சமூக சரித்திரத்திலில்லாத ஒரு புரட்சிக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும்."

— ஜகஜீவன்ராம், விஜயவாடா: மே 5.

உலக அரங்கில்

மூன்றுவது...?

✶

உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருக்கிறது, ஒன்று, ரஷ்யா — இன்னொன்று அமெரிக்கா என்றே இதுகாறும் நாம் கருதிவந்தோம். இது தவிர மூன்றுவது முகாம் ஒன்று அமைக்கவும் முயற்சி நடப்பதாக வெளிநாடுகளில் ஒரு கருத்து நிலவத் துவங்கியுள்ளது. ஆபிரிக்க நாடுகளுக்காக நாசரும், ஐரோப்பிய முற்போக்கு நாடுகளுக்காக டிட்டோவும், ஆசிய தேசங்களுக்காக நேருவும், சேர்ந்து இந்த மூன்றுவது முகாமை அமைக்க விரும்புகிறார்களாம். அண்மையில் பிரியோனி எனுமிடத்தில், நேரு—நாசர்—டிட்டோ மூவரும் சந்தித்துப் பேசியதை ஒட்டி இந்த அபிப்பிராயம் எழும்பியுள்ளது.

✵

அஸ்வான் அணை

✶

சுதந்திரம் அரும்பியுள்ள எகிப்தில், நைல்நதியை மடக்கி அஸ்வான் அணை என்கிற பெயரால் மாபெரும் அணை கட்ட எகிப்து சர்க்கார் முடிவு செய்திருந்தது. இதனால் 20-லட்சம் ஏகர் நிலம், நனசெய்க் காடாகுமாம். இந்தப் பெரிய அணைக் கட்டுக்கு பொருளுதவி செய்வதாக அமெரிக்காவும் பிரிட்டனும் வாக்குறுதியளித்திருந்தன பிரியோனி பேச்சு முடிந்த சில மணிகளுக்கெல்லாம், அமெரிக்கா அறிவித்துவிட்டது தன்னால் பொருளுதவி தர இயலாதென்று- அதை யொட்டி பிரிட்டனும், முடியாதென தெரிவித்துள்ளது. நாசர், இனி, ரஷ்யாவைத்தான் நாடவேண்டும்.

✵

தென் ஆபிரிகா

✶

தென் ஆபிரிகாவில் வெள்ளையர் நடாத்தும் நிறபேதக் கொடுமைகளைத்தான் எல்லோரும் அறிவோமே. இந்தவாரம், டில்லி, தென் ஆபிரிக சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. தீராத இந்தப் பிரச்னையைப்பற்றி மீண்டும் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்பதாக. இந்த வேண்டுகோளை குப்பைத் தொட்டியில் வீசியெறிந்துவிட்டது தென் ஆபிரிகா! இலண்டனில் நடைபெற்ற காமன் வெல்த் மாநாட்டில் கனஜோராக நின்று படம் எடுத்துக் கொண்டார்களே பண்டித நேருவும் இன்னும் எட்டுப் பிரதமர்களும்! அவர்களில், தென் ஆபிரிகாவையாளும் ஸ்டைர்டம் என்பவரும் உளார்! காமன்வெல்தில், நேசக்கரமும், பாசப்பேச்சும் பரிமாறப்பட்டது. பலன், வேண்டுகோள் குப்பைத் தொட்டிக்குப் போகிறது.

✵

பர்மா

✶

பக்கத்து நாடான பர்மாவுக்கு கரீனியர்கள் என்போரால் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சியைச் சமாளிக்க ஆயுதமளித்தும், ஆதரவு காட்டியும் பேருதவி புரிந்தார் நேரு! அதனை, பதவியைத் துறந்த யூநூவும் பலபடப் புகழ்ந்து பாராட்டினார். அந்தப் பர்மாவுக்கு, இந்திய சர்க்கார் ஒரு வேண்டுகோள் விடுத்தனராம், இரஷ்யாவிலிருந்து பர்மா வாங்கிய சிமெண்டில் ஒருபகுதியைத் தமக்கு விற்று உதவுமாறு. இந்தக் கோரிக்கையை பர்மா ஏற்கவில்லை. முடியாதென மறுத்துவிட்டது.

✵

சைப்ரஸ்

✶

பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்று கிரீசுடன் இணைந்து வாழத் துடிக்கும் சைப்ரஸ் தீவுக்கு எப்படிச் சுதந்திரம் வழங்குவது என்பது பற்றியும் அதன எதிர்கால அரசியலமைப்பைப் பற்றியும் ஆலோசனை கூறுவதற்காக ராட்கிளிப் என்பவர், பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். நிலைமைகளை ஆராய அவர் சைப்ரஸ் தீவுக்கு வந்து பத்து நாட்களாகியும் அவரால் எந்தக் காரியமும் செய்ய முடியவில்லையாம். 'மகாரியாசைத் தீவில் கொண்டுபோய் அடைத்துவிட்டு இங்கே என்ன ஆலோசனை?' என்று கேட்டு கிளர்ச்சிக்காரர்கள், ராட்கிளிப்புடன், தொடர்புகொள்ள மறுத்துவிட்டனராம்! இங்கிலை என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை என்கிறார் ராட்கிளிப்!!

✵

ஓவியக்குகை

✶

பிரான்சில் ராய்டியர்ஸ் என்னுமிடத்தில் 'அஜந்தா குகை'யைப் போல ஒரு குகையினை இந்த வாரம் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்! சரிதத்துக்கு மிகவும் பயன்படக்கூடிய இக்குகையில், கண்ணைக்கவரும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளனவாம். உலகத்திலேயே, இந்த குகைச் சிற்பங்கள், மிகச்சிறந்தவையாயிருக்கும் என்று கருதப்படுகிறது.

✵

ஆலந்து

✶

ஹின்ஸ் வான் மீகிரன் என்பது அவன் பெயர்! சிறந்த டச்சு ஓவியன்! எனினும், அவனுடைய ஓவியங்களை யாரும் சீந்தவில்லை. என்ன, செய்வதென்று யோசித்து, தான் தீட்டிய படங்களை, பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஓவியர்களான எவர்மீர், பீடா டேஹுக் என்பார் தீட்டியதெனச் சொல்லி உயர்ந்த உயர்ந்த விலைக்கு விற்று பணம் திரட்டினான்.

உண்மை வெளியாகவே, அவனுக்கு ஓராண்டு தண்டனை கிடைத்தது. சிறையிலேயே 58-வயதில் இறந்தான் ஒரு மாதத்துக்கெல்லாம்!

★

NO M 4642 போன் நெ. 15

"பார்த்தவுடன் சுட்டுக் கொல்லுமாறு பம்பாய் முதல் மந்திரி போலீசாருக்கு உத்தரவிட்டிருந்தார். சுடுவதற்கு முன்பு வேண்டுமென்றே கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்தார்கள். இதனால் மூச்சுத் திணறிய பெண்களும் குழந்தைகளும் தமது அறைகளிலிருந்து வெளியே ஓடிவர நேர்ந்தது. இப்படி வந்தவர்களைப் போலீசார் கண்மூடித்தனமாகச் சுட்டனர். 2500 தோட்டாக்கள் சுடப்பட்டன. 80 பேர் இறந்தனர். 450 பேருக்குக் காயம். ஆனால் போலீசார் தரப்பில் ஏற்பட்ட சேதம் ரொம்ப சொற்பம்"

"வேறு எந்த நாகரீக நாட்டிலும் சட்ட பூர்வமாக இது பற்றி விசாரணை நடத்தியிருக்குமென்றும், ஆகவே ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தவேண்டுமென்றும் கோரினேன்; ஏற்கவில்லை!"

நேரு! நேரு! என்போரே, தேஷ்முக் செப்புவது கேட்டீரா?

*

எவருமே எதிர்பார்த்திருக்க முடியாது, அவ்வளவு காரசாரமாக நேருவின்போக்கை எடுத்து விளக்கியுள்ளார், தேஷ்முக்! நிதி அமைச்சர் பதவியைத் தான் ராஜினமா செய்வதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லி இடிமுழக்கமென அவரிட்ட கர்ச்சனை, காங்கிரசின் வரலாற்றில் குறிப்பிடக் கூடிய தினமாகும்.

நேருவின் சர்வாதிகாரம், ஜனநாயகப் போர்வையில் அவர் நடாத்தும் ஏகபோக உரிமை, எல்லோரையும் எடுபிடிகள்போல் எண்ணும் மனப்பான்மை, அதற்கு எதிர் வார்த்தை சொன்னவர்களை — அவர்கள் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களானல் அந்த மக்களையே அழித்து ஒழிக்கும் மனோபாவம்—ஆகியவைகளை நாம் எடுத்துக் கூறியபோதெல்லாம், காய்ந்தனர். கோபத்தை வீசினர், காங்கிரஸ் நண்பர்கள். இதோ, அவருடைய அத்யந்த சகா, ஆருயிர்த் தோழரெனக் கருதப்பட்டவர், நிதி மந்திரி கூறுகிறார், நேருவைப்பார்த்து,

> சுட்டுக் கொன்றது நியாயமா?
> விசாரணை நடத்த ஏன் மறுத்தீர்?
> நாகரீகமா அது?

என்பதாக. இப்படி பம்பாயில் அக்கிரமங்களைச் செய்ய எது காரணமாகயிருந்ததோ அந்த மொழிவாரி அரசு அமைப்புகளைப் பற்றி நேரு பண்டிதர் யாரையும் மதித்து யோசனைகள் கேட்கவில்லையாம். வாய்ச்சொல்லே கட்டளை எனும் மனப்போக்கில் நடந்துகொண்டாராம்.

தேஷ்முக் தெளிவாகவே கூறுகிறார், "ஒரு மொரார்ஜிதேசாய்க்காக எமது மராட்டியத்தையே மட்டந்தட்ட முடிவு செய்யலாமா, பண்டிட்ஜி?", என்று. தேஷ்முக் தெரிவித்த தகவல்களைக் கேட்டு, காங்கிரஸ்காரர்கள் யாவரும் பதில்பேச வழியின்றி, கலக்கத்தோடு இருந்தனராம். நேருவே, கூம்பிய முகமும் வேதனைத் தோற்றத்துடனும் காட்சியளித்தாராம்.

பார்லிமெண்டில், தேஷ்முக்கின் குற்றச்சாட்டுக்கு தக்க பதிலளிக்கவில்லை, பண்டித நேரு. 'இப்படியெல்லாம் தேஷ்முக் விளாச ஆரம்பித்துவிட்டாரே!' எனும் வேதனை தான் அதிகம் தென்பட்டிருக்கிறது, அவர் பதிலில்.

மராட்டியர், நேருவின் தீர்ப்பை மறுத்தனர் — பம்பாயைக் கூறு போட முடியாதெனக் கூறினர். கோபம் பொங்கியது நேருவுக்கு! நான் சொன்னல் சொன்னதுதான், என்று புனர் பரிசீலனை செய்ய மறுத்தார். அக்கிரமம், அநீதி என்று கண்டித்த மராட்டியர்களைச் சுட்டுப் பொசுக்கினர்.

தேஷ்முக் கேட்கிறார், "பம்பாய் விஷயத்தில் முடிவு செய்ய, அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவனை என்னைக் கலந்தீரா? அதற்காக இல்லாவிடினும் நிதியமைச்சனாக இருக்கிறேனே, அதற்காகவாவது என்னை ஆலோசனை கேட்டீரா? என்னை வேண்டாம், மந்திரி சபையில் பேசினோமோ—கிடையாதே! நீர்பாட்டுக்குப் பொதுக் கூட்டத்தில் ஒரு முடிவு கூறி, அதை யாவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், இது என்ன ஜனநாயகமா?", என்பதாக,

பதவியையும் துறந்துவிட்டார்.

நமது பக்தவச்சலமும், காமராஜரும், சுப்பிரமணியமுமோ, 'நேரு சொன்னல் அது எதானாலும் வேத வாக்காக நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்', என்று கூறி, கோட்டை விடுகின்றனர்.

தேஷ்முக், அதோ, திரையைக் கிழிக்கிறார்!

உண்மை நேருவைக் காட்டுகிறார்!!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... சி. என். அண்ணுதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.